Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 23 இதழ் - 12 டிசம்பர் 2010

தனிப் பிரதி ரூ. 8/-




**கிறிஸ்துவின் சபை**

காங்கயம் 638 701. தமிழ்நாடு. இந்தியா.

04257 - 230030, 98427 - 30382, 99655 - 30385

# BIBLE MEDITATION

## TV PROGRAM





## ஆசானின் அறிவுரையில்...


1. ஆசிரியர் உரை ........ 1
2. போதிக்கப்படாதவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்களா? ........ 10
3. பெண்கள் பகுதி ........ 13
4. வாலிபர் பகுதி ........ 17
5. சிறுவர் பகுதி ........ 19
6. துருவின் சாட்சி ........ 21
7. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ........ 25
8. சுவிசேஷம் ........ 29
9. ஒன்றான மெய் தேவனை எப்படி அறிவது? ........ 30

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 23 DECEMBER - 2010 Issue - 12**


## உங்களுக்காக

### எங்கள் நூல் வெளியீடுகள் ஆயத்தமாயிருக்கின்றன

1. ஆத்தும ஆதாயப் பிரசங்கங்கள் - பாகம் I
   (" ஆசிரியர் உரை " பகுதியில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு)
2. ஏன் நாங்கள் நம்புகிறோம் எதை நாங்கள் நம்புகிறோம் - பாகம் I
3. ஏன் நாங்கள் நம்புகிறோம் எதை நாங்கள் நம்புகிறோம் - பாகம் II
4. துருவின் சாட்சி
5. திருமறையில் பெண்ணின் பங்கு
6. பரிசுத்த ஆவியானவரின் பணி
7. புதிய ஏற்பாட்டு ஆராதனை

இந்நூல்கள் வேண்டுவோர் தபால் செலவுக்கு மணி ஆர்டர் (M.O.) செய்து பெற்றுக் கொள்ளலாம்.

– ஆசிரியர்.

ஆசிரியர் உரை

# "தேவனுக்குச் சொத்தாயிருப்போம்"

செம்மொழியாம் தமிழ் மொழியில் கிட்டத்தட்ட எல்லோரையும் ஈர்க்கக் கூடிய சொற்கள் என்று சில சொற்களை நாம் குறிப்பிட முடியும். இருப்பினும், அப்படிக் குறிப்பிடப்படும் எல்லாச் சொற்களும் ஈர்க்கும் தன்மையில் ஒன்றுபோல இருந்து விடுவதில்லை. எப்படியெனில், சில சொற்களை நாம் கேட்கும் போது அவை பிற சொற்களைக் காட்டிலும் கூடுதலான ஈர்ப்புத் தன்மை கொண்டதாக இருக்கும். அதாவது, கவனத்தை ஈர்த்து, மனதை வசப்படுத்தி உடனடியாக செயலில் இறங்க வைக்கக் கூடியதாக இருக்கும். இப்படி ஈர்த்து வசப்படுத்தும் வார்த்தைகளுக்கென்று நாம் ஒரு தனி பட்டியலைப் போட முடியும். இத்தனிப்பட்டியலில் இடம் பெற்று, பட்டியலின் முதலிடத்தைப் பிடிக்கப் போட்டியிடும் தகுதி "சொத்து" என்னும் சொல்லுக்கு உண்டு. வயது, மொழி, இனம், சமயம், தேசம் என்று எவ்விதப் பாகுபாடும் இல்லாமல் இச்சொல் எல்லோரையும் ஏகமாய்ப் பாதித்து, மனுக்குலத்தைத் தன் முழுக்கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது. இதன் கிடுக்கிப் பிடியில் சிக்காமல் தப்பித்த மனிதர்கள் யாராவது இருக்கிறார்களா என்று பூதகண்ணாடி வைத்துத் தேட வேண்டிய நிலை தான் இன்றுள்ளது. தங்களை ஆன்மீகவாதிகள் என்று சொல்லி தலைநிமிர்ந்து நடப்பவர்கள் கூட, சில நேரங்களில் இதன் கோரத் தாண்டவத்துக்கு முன்பாக மண்டியிட்டு விடுகின்றனர்.

இப்பூமியின் வாழ்க்கையில் தங்களுக்கென்று ஒன்று சொந்தமாக வேண்டுமென்பதற்காக, ஒன்று சொத்தாக மாற வேண்டுமென்பதற்காக மனிதன் படுகின்ற பிரயாசைகளுக்கும், படும் பாடுகளுக்கும், மேற்கொள்ளும் முயற்சிகளுக்கும், ஏன் சில வேளைகளில் அவன் செய்யும் சில்லறைத்தனங்களுக்கும் அளவே இருப்பதில்லை. ஒருநாளில் அழிந்துபோகும் இந்த மனிதன், ஏதாவது ஒரு கட்டத்தில் இழந்து போகும் அல்லது அழிந்து போகும் ஒன்று தனக்குச் சொத்தாக சொந்தமாக மாற வேண்டுமென்பதற்காக இப்பூமியின் வாழ்க்கையில் பகீரதப் பிரயத்னம் செய்து கொண்டிருக்கும்போது, நித்தியமான தேவன், ஒன்றுக்கும் உதவாத மனிதனைப் பார்த்து, அட, மனிதா நீ எனக்குச் சொத்தாக மாறு (யாத். 19:5) என்று கூறுவதைக் கேட்பதற்கு மிகவும் பரவசமாக இருக்கிறது. அதுமாத்திரமல்ல, சர்வவல்ல தேவன் எங்கே இப்படிக் கூறியுள்ளார் என்று தெரிந்து கொள்ளும்படியான ஆவலையும் ஏற்படுத்துகிறது. அப்படித்தானே!.

சரி, இதற்கான பதிலைப் பெற்றுக்கொள்ள நமது வழக்கத்தின்படியாக, நமது தலைப்பு சம்மந்தப்பட்ட பின்னணி பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்ள முயற்சிப்போம்.

பரிசுத்த வேதாகமத்தின் இரண்டாவது நூல் யாத்திராகமம் புத்தகம். யாத்திராகமம் என்பது ஒரு காரணப் பெயர். நானூற்று முப்பது வருடங்கள் எகிப்தில் அடிமைகளாயிருந்த யாக்கோபின் சந்ததியார், மோசேயின் தலைமையின் கீழாக விடுவிக்கப்பட்டு மேற்கொண்ட யாத்திரை பற்றி இந்நூல் விளக்குவதால் இது யாத்திரை ஆகமம் என்றழைக்கப்படுகிறது. ஒருவேளை, இந்நூல் மோசேயைக் கொண்டு எழுதப்பட்டிருந்தாலும், உண்மையில், ஆம், மோசேயின் வாழ்க்கையே இந்நூலில் தான் ஆரம்பமாகிறது. மோசேயின் வாழ்க்கையும், அவர் தேவனுக்காகச் செய்த மகத்தான வேலையும் இந்நூலில் ஆரம்பமாகி, உபாகமப் புத்தகம் வரை நீள்கிறது. சொல்லப்போனால், ஒட்டுமொத்த வோதகமத்தின் ஏழில் ஒரு பகுதியை ஆவியானவர் மோசே சம்பந்தப்பட்ட காரியங்களுக்கு ஒதுக்கியுள்ளார். இது தேவனும், ஆவியானவரும் மோசேக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை நமக்கு எடுத்துரைப்பதாகவே உள்ளது.

இப்படிப்பட்ட தேவ மனிதனாகிய மோசேயைக் கொண்டு, அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட மூன்றாம் மாதத்தின் முதல் தேதியில் சீனாய் மலைக்கு எதிரே உள்ள சீன் வனாந்திரத்தில் பாளயமிறங்கினார்கள். மோசே, தேவ கட்டளையை ஏற்று யாத்திரைக்குத் தலைமையேற்று நடத்தி வந்தாலும், திரளாய் இருக்கிற இந்த ஜனங்களை வழிநடத்துவதற்குத் தேவ ஒத்தாசையில்லாமல் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்பதை உணர்ந்து, தேவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள தேவனிடத்திற்கு மலைக்கு ஏறிப்போனான் (யாத். 19:3). அங்கே மோசேயை அழைத்த தேவன் இவ்விதம் கூறியுள்ளார். "..... நீ யாக்கோபு வம்சத்தாருக்குச் சொல்லவும், இஸ்ரவேல் புத்திரருக்கு அறிவிக்கவும் வேண்டியது என்னவென்றால், நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின் மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக் கொண்டதையும் நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் **என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால் சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்.** பூமியெல்லாம் என்னுடையது என்றார் (யாத். 19:3-5).

மேற்கண்ட வசனப்பகுதி, ஓர் உண்மையை நமக்குப் பளிச்செனத் தெரிவிக்கிறது. யாருக்கும் சொந்தமில்லாமல் சீந்துவாரின்றி அடிமைகளாக ஒரு காலத்தில் வாழ்ந்த இஸ்ரவேல் ஜனம், " சர்வ வல்ல தேவனுக்குச் சொத்தாயிருக்க " முடியும் என்பது. நாதியின்றி வாழ்ந்த ஒரு ஜனம், தேவாதி தேவனுக்குச்

சொத்தாக மாற முடியுமென்பது நினைத்தே பார்க்க முடியாத ஓர் ஆசீர்வாதம். ஆனால், இந்த இடத்தில் இன்னொரு உண்மையைப் பார்க்க நாம் தவறிவிடக்கூடாது. ஆம், சொத்தாக இருக்க முடியு மென்று சொன்ன நம் தேவன், அப்படித் தனக்கு அவர்கள் சொந்த மானவர்களாக மாறுவதற்கு சில நிபந்தனைகளைக் கொடுத்தி ருக்கிறார். அந்த நிபந்தனைகளை நிறைவேற்றினால் தான் அவர் கள் அவருக்குச் சொத்தாக மாற முடியும். இல்லையானால் தேவ னுடைய பார்வையில் அவர்கள் சொத்தையானவர்களாகவே இருப்பார்கள்.

இங்கே, அடிமைகளாக இருந்த இஸ்ரவேலர்கள் தேவனுக் குச் சொத்தாக மாறுவதற்குக் கொடுக்கப்பட்ட நிபந்தனைகள் மூன்று

1. என் வாக்கைக் கேட்க வேண்டும்
2. என் வாக்கை உள்ளபடி கேட்க வேண்டும்
3. என் உடன்படிக்கையைக் கைக்கொள்ள வேண்டும்

இம்மூன்றையும் செய்யும் போது தான் தேவனுக்கு அவர்கள் சொத்தாக மாற முடியும்.

நாதியற்றுக் கிடந்த இந்த இஸ்ரவேலர் தேவனுக்குச் சொத்தாக மாறமுடியும் என்பதை நாம் வாசிக்கும்போது, அடடா, அந்த பாக்கியம் இந்நாளில் வாழும் எனக்குக் கிடைக் காத என்ற ஓர் ஏக்கம் நமக்குள் ஏற்படுகிறது. அப்படித்தானே. ஒன்றை இங்கே நினைவில் வையுங்கள். சர்வவல்ல தேவனிடத் தில் பட்சபாதம் என்பது எக்காலத்திலும் இல்லை (அப். 10:34) ஆகையால், அவர் கொடுக்கும் நிபந்தனைகளை ஏற்றுக்கொண் டால், இன்றைக்கு வாழும் நாமும் அவருக்குச் சொந்தமாக, சொத் தாக எதிர்வரும் புதிய ஆண்டில் இருக்க முடியும். இதில் எவ்வித சந்தேகமும் யாருக்கும் தேவையில்லை.

சரி, தேவன், நாம் சொத்தாக இருப்பதற்குக் கொடுக்கும் நிபந்தனைகளைக் கொஞ்சம் விரிவாகப் பார்த்து, நமக்கான பாடங்களைக் கற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

## I தேவ வார்த்தையைக் கேட்க வேண்டும்

எதிர்வரும் புதிய ஆண்டில் நாம் தேவனுக்குச் சொத்தாயி ருப்பதற்குச் செய்ய வேண்டிய முதலாவது காரியம், நாம் தேவனு டைய வார்த்தையைக் “கேட்கிறவர்களாக” இருக்க வேண்டும் என்பது.

பொதுவாகவே, ஆன்மீக சிந்தையுடைய ஒவ்வொருவரும் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதற்கு ஆவலுள்ளவர்களாகத் தானே இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு அவருடைய வார்த்தையைக் கேளுங்கள் என்று மறுபடியும் சொல்வது அவசி யமா என்று ஒருவேளை நீங்கள் கேட்கக் கூடும். ஆனால்,

"கேளுங்கள்" என்று சொல்வது கண்டிப்பாக அவசியமே. ஏனெனில், இந்நாட்களில் உள்ள மிகப் பெரும்பாலான கிறிஸ்தவ சமுதாயம் தேவனுடைய வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைக் காட்டிலும், பிறருடைய வார்த்தைகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கிறது. இத்தீமை ஏதேன் தோட்டத்திலேயே ஆரம்பமாகி விட்டது. எப்படியெனில், தேவன், ஆதாம், ஏவாளிடம் புசிக்க வேண்டாம் என்று சொன்ன வார்த்தையை மீறி, பிசாசு தந்திரமாகச் சொன்ன வார்த்தைக்கு அவர்கள் செவி கொடுத்தார்கள். அதன் விளைவு, பாவம், தொடர்ந்து மரணம் (ஆதி. 3-ம் அதி). அன்று ஆரம்பமான இத்தீமை வாழையடி வாழையாய் நம்முடைய நாட்கள் பரியந்தம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. ஆனால், தேவனுக்குப் பயப்படும் ஒருவன், தேவனுக்குப் பிரியமாய் வாழ விரும்பும் ஒருவன், "கர்த்தாவே, சொல்லும், அடியேன் கேட்கிறேன்" (1சாமு. 3:10) என்ற சாமுவேல் பிள்ளையாண்டான் மன நிலைக்கு வந்தாக வேண்டும். பாவத்திலிருந்து விடுதலை தரும் கிறிஸ்தவ வாழ்க்கையின் துவக்கத்திற்கும, பரலோக பாக்கியம் பெற்றுத்தரும் கிறிஸ்தவ வாழ்க்கையின் முடிவுக்கும், தேவனுடைய வார்த்தையைக் கேட்பது மிகவும் அவசியம்.

தேவனுக்காக வாழ்வதற்கும், தேவனுக்கு எதிராக வாழ்வதற்கும் "அவருடைய வார்த்தைகளைக் கேட்பது" மிக முக்கிய பங்காற்றுகிறது. ஆம், சபை ஆரம்பிக்கப்பட்ட பெந்தெகொஸ்தே நாளில் எருசலேம் பட்டணத்தில் ஆயிரங்களில் கூடியிருந்த யூதர்களுக்கு மத்தியில், பதினொருவரோடுங்கூட எழுந்து நின்ற பேதுரு தன் பிரசங்கத்தைத் துவங்கும் போது சொன்ன முதல் காரியம், ஆவியானவர் என் மூலமாகப் பேசும் "வார்த்தைகளுக்குச் செவி கொடுங்கள்" (அப். 2:14) என்பதே. இந்தத் திரளான ஜனம் பேதுருவின் பிரசங்க வார்த்தைகள் முழுவதுக்கும் செவி கொடுத்ததின் பலன் தான் 3000 பேர் இரட்சிக்கப்பட்டது (அப். 2:41) தேவனுடைய வார்த்தைகளை இவர்கள் கேட்காமலிருந்திருந்தால் ஒருவர் கூட இரட்சிப்படைந்திருக்க முடியாது.

இதற்கு நேர் எதிரான இன்னொரு சம்பவத்தை கவனியுங்கள். அப்போஸ்தலர் 7-ம் அதிகரத்தில் முதல் இரத்தசாட்சியான ஸ்தேவன், "சகோதரரே, பிதாக்களே கேளுங்கள்" என்று மிகச் சிறந்த ஒரு பிரசங்கத்தை அழகாக ஆரம்பித்தார் (7:2) ஆனால், ஒரு கட்டத்தில் தேவன் ஸ்தேவானைக் கொண்டு பேசின "வார்த்தைகளைப் பொறுக்க மனதில்லாமல், தங்கள் காதுகளை அடைத்துக் கொண்டார்கள்" (அப். 7:52). விளைவு, பரிசுத்தவானாகிய ஸ்தேவானைக் கல்லெறிந்து கொலை செய்தார்கள் (7:58). பெந்தெகொஸ்தே நாளில், பேதுருவின் மூலம் தேவ வார்த்தைகளைக் கேட்ட "கொலைகாரர்கள்" (2:23) இரட்சிப்படைந்தார்கள். இங்கே, ஸ்தேவானைக் கொண்டு தேவன் பேசின வார்த்தைகளைக் கேட்க மறுத்தவர்கள் "கொலைகாரர்களானார்கள்". தேவனுடைய வார்த்யைக் கேட்பது எவ்வளவு பெரிய மாற்றத்தை ஒருவருடைய வாழ்க்கையில் ஏற்படுத்துகிறது என்று பாருங்கள். இப்பேருண்மை தெரிந்தபடியால்தான் "செவி கொடுத்தல்

உத்தமம்" (I சாமு. 15:22) என்று பழைய ஏற்பாட்டு சாமுவேல் தீர்க்கனும் கேட்கிறதற்குத் "தீவிரமாய் இருங்கள்" என்று புதிய ஏற்பாட்டு யாக்கோபு ஆசிரியரும் (யாக். 1:19) கூறியுள்ளனர்.

அப்படியானால் அருமையானவர்களே, தேவனுடைய வார்த்தைகளைக் கேட்பதில் நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறோம்? புதிய ஆண்டில் நாம் ஒவ்வொருவரும் தேவனுக்குச் சொந்தமானவர்களாகவும், சொத்தாகவும் இருக்க வேண்டுமானால், தேவனுடைய வார்த்தைகளைக் கேட்பதற்கு நாம் அதிகமான நேரத்தைச் செலவிட வேண்டும். ஞாயிறு ஆராதனை மாத்திரம் போதுமென்றிராமல் வேத வகுப்புகள், குடும்ப கூடுகைகள் போன்ற கூட்டங்களிலும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். நாம் ஒவ்வொருவரும் இப்படிக் கேட்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கும்படியான தீர்மானம் எடுப்போம்.

## II தேவ வார்த்தையை உள்ளபடி கேட்க வேண்டும்

எதிர்வரும் புதிய ஆண்டில் நாம் தேவனுக்குச் சொத்தாயிருப்பதற்குச் செய்ய வேண்டிய இரண்டாவது காரியம், தேவனுடைய வார்த்தைகளை "உள்ளபடி" கேட்கிறவர்களாக இருக்க வேண்டுமென்பது.

இதென்ன புதிதாக இருக்கிறது! கேட்க வேண்டுமென்பதற்கும், உள்ளபடி கேட்க வேண்டுமென்பதற்கும் அப்படியென்ன பெரிய வேறுபாடு இருக்கிறது என்று நினைக்கிறீர்களா? ஒருவேளை நாம் நினைப்பது போல எந்த வேறுபாடும் இல்லாமலிருக்குமானால், தேவன், "உள்ளபடி" என்ற வார்த்தையை இங்கே பயன்படுத்தியிருக்க வேண்டிய அவசியமே இல்லை தானே. அப்படியானால், தேவன் இங்கே எதையோ வலியுறுத்துகிறார் என்று தானே தெரிகிறது. தேவனுடைய வார்த்தை உள்ளபடி பேசப்படாது என்பதையும், உள்ளபடி கேட்கமாட்டார்கள் என்பதையும் அறிந்து தானே இப்படிச் சொல்லியுள்ளார். அதுமாத்திரமல்ல, வேதாகமத்தின் ஆரம்பத்திலும், மத்தியிலும், இறுதியிலும் இது குறித்த தமது அழுத்தமான கருத்தை ஆவியானவரைக் கொண்டு வெளிப்படுத்தியிருக்கிறார். " நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும்படி, நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்" என்றும் (உபா. 4:2). அடுத்து, நீதிமொழிகள் 30:6-ல், "அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே, கூட்டினால் அவர் உன்னைக் கடிந்து கொள்வார், நீ பொய்யனாவாய்" என்றும், இன்னும் திடமாக, ஓர் எச்சரிப்பாக வேதாகமத்தின் இறுதி நூலாகிய வெளிப்படுத்தல் 22:18,19-ல், "இந்தப் புத்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது; ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன் மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புத்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும்

எடுத்துப்போட்டால், ஜீவ புத்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்தி லிருந்தும், இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப் போடுவார்".

தேவனுடைய வார்த்தைகளை ஒருவன் உள்ளபடி கேட்டு அதன்படி தான் செய்ய வேண்டுமென்பதை தேவன் இதைவிடத் தெளிவாக எப்படித்தான் சொல்ல முடியும்? தேவனுடைய வார்த்தையை ஒருவன் உள்ளபடி கேட்க வேண்டுமானால், அது அவனுக்கு உள்ளபடி போதிக்கப்பட வேண்டும். இதன் அவசியம் கருதித்தான் ஆவியானவர் பேதுரு அப்போஸ்தலனைக் கொண்டு இவ்விதம் வெளிப்படுத்தியுள்ளார். "ஒருவன் போதித்தால் தேவ னுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்" (I பேதுரு 4:11) என்று. பவுலுடைய நாட்களில் போதிக்கப்பட்டவைகள் உள்ளபடி போதிக்கப்படவில்லை. அதினிமித்தம் தான், பவுலடி யார் கொரிந்தியருக்கு இவ்விதம் எழுதியுள்ளார். "அநேகரைப் போல, நாங்கள் தேவ வசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புர வாகவும், தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும், கிறிஸ்துவுக் குள் தேவ சந்நிதியில் பேசுகிறோம்" (II கொரி. 2:11) என்று.

ஆனால், அருமையானவர்களே, தேவனை நேசிக்கும் நாம் ஒவ்வொருவரும், நம்முடைய வாழ்க்கையில் தேவனுக்குப் பிரிய மானதைச் செய்யும்படியாக, நமக்கு போதிக்கப்படுபவைகள் உள்ளபடி போதிக்கப்படுகிறதா? என்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஆம், உள்ளபடிதான் போதிக்கப்படுகிறது என்பது உண்மையானால், " பிதாவே, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்க வேண்டும் " (யோவான் 17:21) என்று மன்றாடின இயேசுவின் ஜெபத்திற்கு மாறாக, இத்தனை பிரிவுகள் கிறிஸ்த வத்தில் எப்படி வந்தது? என்ன காரணம்? " இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் " (மத். 16:18) என்று இயேசு வாக்க ளித்ததற்கு மாறாக, எண்ணற்ற சபைகள் எங்கிருந்து வந்தது? வசன ரீதியான இரட்சிப்பின் திட்டத்திற்கு (அப். 2:38) எதிராக மாறுபட்ட உபதேசங்கள் யாரால் கொண்டு வரப்பட்டது. மேலும், உண்மையான ஆராதனையின் (யோவான் 4:24) மாண்பு மீறப்பட்டு, எப்படி வேண்டுமானாலும் ஆராதிக்கலாம் என்ற எண்ணம் எப்படி வந்தது? இன்னும், பண்டிகைகள் பற்றி புதிய ஏற்பாடு எதுவுமே பேசாத நிலையில் பண்டிகைக் கொண்டாட் டத்தில் மூழ்கி வேத வசனங்களை அவமதிக்கும்படியான துணி கரம் வந்தது எப்படி? இவைகளுக்கெல்லாம் என்ன காரணம்? "உள்ளபடி" தேவ வார்த்தைகள் போதிக்கப்படாததும், "உள்ள படி" கேட்கப்படாததும் தானே. உள்ளபடி கேட்க வேண்டும் என்ப தற்கு தேவன் ஏன் முக்கியத்துவம் தந்தார் என்று இப்பொழுது விளங்குகிறதா?.

ஆகையால், அருமையானவர்களே, எதிர்வரும் புதிய ஆண்டிலிருந்தாவது, நமது பக்தி வாழ்க்கையிலிருக்கும் தவறு களைக் களைந்து, தேவனுடைய வார்த்தைகளை நாம் "உள்ளபடி

கேட்டு" அவருடைய சொத்தாக நம்மை மாற்றிக் கொள்ளத் தீர்மானிப்போம்.

## III தேவ உடன்படிக்கையைக் கைக்கொள்ள வேண்டும்

எதிர்வரும் புதிய ஆண்டில் நாம் தேவனுக்குச் சொத்தாயிருப்பதற்குச் செய்ய வேண்டிய இன்னொரு காரியம், நாம் தேவனுடைய உடன்படிக்கையைக் கைக்கொள்ள வேண்டுமென்பது.

"உடன்படிக்கை" என்பதின் பொருள் "ஒப்பந்தம்". இது இரண்டு பிரிவாருக்கு மத்தியில் ஏற்படுவது. இதனடிப்படையில், பழைய ஏற்பாடாகிய, பழைய உடன்படிக்கை, தேவனுக்கும், இஸ்ரவேல் ஜனங்களுக்கும் மத்தியில் ஏற்பட்ட ஓர் ஒப்பந்தம் உபாகம் 5:1-3-ன் வசனங்கள் இந்தப் பொருளிலே தான் கூறுகிறது. "நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஓரேபிலே நம்மோடே உடன்படிக்கை பண்ணினார். அந்த உடன்படிக்கையைக் கர்த்தர் நம்முடைய பிதாக்களுடன் பண்ணாமல், இந்நாளில் இங்கே உயிரோடிருக்கிற நம்மெல்லாரோடும் பண்ணினார்" என்று. உடன்படிக்கை சம்பந்தமாக நாம் கவனிக்க வேண்டிய இன்னொரு காரியம், அது சம்பந்தப்பட்ட இரு தரப்பாரை மாத்திரம் கட்டுப்படுத்தும் என்பது. ஆகவே தான், மோசே, இங்கே "நம்முடைய பிதாக்களுடன் பண்ணாமல்" என்று அழுத்திக் குறிப்பிடுகிறார்.

கிறிஸ்துவின் சிலுவைக்குப் பின்னால் வாழும் நம்மை, பழைய உடன்படிக்கை கட்டுப்படுத்தாது. ஏனெனில், எபிரெயர் ஆசிரியர் எழுதும் போது, "ஆகையால், முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்திரத்தை அடைவதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்" (எபி. 9:15) என்று விளக்குகிறார். இன்னும், பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதும்போது, " புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்" என்று கூறியுள்ளார் (II கொரி. 3:6).

இஸ்ரவேலர்கள் தேவனுக்குச் சொத்தாயிருப்பதற்குப் பழைய உடன்படிக்கையைக் கைக்கொள்வது அவசியமானால், சிலுவைக்குப் பின்னால் வாழும் நாம் தேவனுக்குச் சொத்தாக மாறும்படி புதிய உடன்படிக்கையின் கோட்பாடுகளைப் பின்பற்றுவது அவசியம். மோசேயின் மூலம் கொடுக்கப்பட்டது பழையது. கிறிஸ்துவால் கொடுக்கப்பட்டது புதியது. இந்தப் புதிய பிரமாணத்தை யாக்கோபு ஆசிரியர் " பூரணப் பிரமாணம் " என்று குறிப்பிடுகிறார். (யாக். 1:25) இன்றைக்கு நாம் பக்தி வாழ்க்கையில் செய்யும் எல்லாமே புதிய உடன்படிக்கையாகிய, புதிய பிரமாணமாகிய கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டின்படி தான் இருக்க வேண்டும். ஏனெனில், இந்தப் புதிய உடன்படிக்கை தான் நம்மை ஒரு நாளில் நியாயந்தீர்க்கப் போகிறது. நான் சொன்ன வசனமே

ஒருவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் (யோவான் 12:48) என்றே இயேசு விளம்பியுள்ளார்.

தேவன் மோசேயைக் கொண்டு இஸ்ரவேலர்களிடம் பேசின போது, தனக்குச் சொத்தாயிருக்க அவர்கள் உள்ளபடி கேட்டால் போதாது, "உடன்படிக்கைகளைக் கைக்கொள்ள வேண்டும்" என்றும் கூறியுள்ளார். கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையிலும் இதே உபதேசம் உண்டு. "அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயுமிருங்கள்" (யாக். 1:22) என்றார். ஒருவேளை, கேட்பது எப்படியோ கேட்டு விடலாம். ஆனால், நாம் அதின்படி செய்வது சுலபமானது அல்ல. இதற்குக் கீழ்ப்படிதலும், ஒப்புக்கொடுத்தலும் தேவை. ஆனால், தேவனுக்குச் சொத்தாயிருக்க வேண்டுமானால், கிறிஸ்துவின் உபதேசப்படி செய்தாக வேண்டும்.

அப்படியானால், அருமையானவர்களே, நாம் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தைத்தான் கைக்கொண்டு நம்முடைய பக்தி வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறோமா? நம்முடைய விசுவாசம், ஞானஸ்நானம், இரட்சிப்பு கொடுத்தல், பாடுதல், ஜெபித்தல், கரத்தரின் பந்தி, அனுதின வாழ்க்கை என்று இவை அனைத்தும் கிறிஸ்துவின் உடன்படிக்கையின்படி தான் உள்ளதா? சிந்திப்போம். கிறிஸ்துவின் உடன்படிக்கையின்படி தான் நான் வாழ்கிறேன் என்று சொல்வதாயிருந்தால் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டில் சொல்லப்படாத எதையும் நாம் செய்யக் கூடாது. ஆம், மதப்பட்டங்கள் கூடாது (மத். 23:10). இசைக் கருவிகள் கூடாது (எபே. 5:19), நடனம் கூடாது (I கொரி. 14:40), பண்டிகைகள் கூடாது (கொலோ. 3:17), பல சபைகள் கூடாது (எபே. 4:4,12) குழந்தை ஞானஸ்நானம் கூடாது (மாற். 16:16). இப்படி புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவால் கட்டளையிடப்படாத, அப்போஸ்தலர்களால் உபதேசிக்கப்படாத, ஆதித் திருச்சபை மக்களால் கைக் கொள்ளப்படாத எதுவுமே கூடாது, கூடாது உலகமே எதிர்த்து நின்றாலும் கூடாது. ஏனெனில், கிறிஸ்துவின் உபதேசத்தில் நடவாமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல (II யோவான் 9) என்று வேதாகமம் திட்டமாகப் போதிக்கிறது.

ஆகையால், எனக்கன்பானவர்களே! வரும் புத்தாண்டில், நாம் ஒவ்வொருவரும் தேவனுக்குச் சொத்தாயிருக்கும்படியாக கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையின்படி மாத்திரம் செய்யத் தீர்மானித்து, அதற்காக நம்மை நாம் சமூலமாக ஒப்புக் கொடுப்போமாக! தேவ சமாதானம் இப்புதிய ஆண்டில் உங்களோடிருப்பதாக! ஆமென்.

**E.Z.S. இராஜநாயகம்**

***அன்பான வாசகர்கள் ஒவ்வொருவருக்கும் எங்கள் புத்தாண்டு வாழ்த்துகள்.***

# போதிக்கப்படாதவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்களா?

எல்லா மனுக்குலத்துக்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்வதில், இயேசு, நாம் என்ன செய்ய வேண்டுமென்று சொன்னாரோ, அதைச் செய்வதற்கு சபையில் கொஞ்சம் பேர் தான் உள்ளார்கள். ஏன் இந்த நிலைமை? புள்ளி விவரங்கள் ஓர் அதிர்ச்சியான தகவலை நமக்குக் கொடுக்கிறது. அநேகர், குறிப்பாகக் கல்லூரி செல்லும் பருவத்தில் இருக்கும் இளம் வட்டங்கள், தாங்கள் தேவ கட்டளைகளை அறியாமல் வாழ்ந்து கொண்டுள்ளபடியால், அதாவது சுவிசேஷத்தைக் கேள்விப்படாதபடியால், நியாயத் தீர்ப்பில் இரட்சிக்கப்படுவோம் என்று நம்புகிறார்கள்.

இந்த வாதத்தின் அடிப்படையில் இவர்கள் இப்படிப்பட்ட ஒரு முடிவுக்கு வருகிறார்கள். தேவனைப் பற்றி அறியாமலிருப்பது, அவர்கள் நித்திய காலத்திற்கும் இழந்து போகாமலிருக்கச் செய்யுமானால், நாம் சுவிசேஷத்தை அவர்களுக்கு எடுத்துச் செல்லக்கூடாது. ஏனெனில், நாம், போதித்து, அவர்கள் இரட்சிப்பின் செய்தியை ஒருவேளை தள்ளிவிட்டால், நியாயத் தீர்ப்பின் நாளில் குற்றவாளிகளாகக் காணப்படுவார்கள்!

இப்படி, சுவிசேஷத்தைக் கேள்விப்படாத எல்லா ஜனங்களும் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்று நம்புபவர்கள், கர்த்தருடைய இரட்சிப்பின் செய்தியை அவர்களுக்கு எடுத்துச் செல்வதில் எந்த ஒரு முயற்சியும் எடுக்கமாட்டார்கள். தங்கள் அறியாமையினிமித்தம் அவர்கள், நித்திய காலத்திற்கும் இரட்சிக்கப்பட்டிருப்பது உண்மையானால், நாம் அவர்களுக்குப் போதிப்பதில் எந்த ஒரு நன்மையும் செய்வதில்லை.

இவர்களின் இந்தக் குதர்க்க வாதம், தர்க்க ரீதியாக சரியாக இருப்பது போல் தோன்றினாலும், வேதாகமத்தின் அடிப்படையில் தவறானது. உண்மை என்னவென்றால், ஜனங்கள், சுவிசேஷத்தைக் கேட்பதாலோ, கேட்காமல் இருப்பதாலோ இழந்து போகிறதில்லை. மாறாக, பாவிகளாயிருப்பதாலும், பாவத்தில் இருப்பதாலுமே இழந்து போகிறார்கள். அவர்கள் பாவிகளாயிருப்பதால், தங்கள் பாவங்களுக்கு மன்னிப்புப் பெறாத நிலையில் மரிக்கும் போது, நித்திய காலத்திற்கும் இழந்து போகிறார்கள்.

ஆனால், அவர்கள் எப்படி இரட்சிக்கப்படமுடியும்? அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும், இயேசு கிறிஸ்துவால் அவர்களை இரட்சிக்க முடியும், ஆனால் அவருடைய சித்தத்தை கேள்விப்பட்டபிறகு இரட்சிக்கப்படும்படி சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டும் (மாற்கு 16:15,16). தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜூவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும் (II தெசலோனிக்கேயர் 1:7,8). இங்கே பவுல் சொல்கிறதைக் கவனியுங்கள், அதாவது தேவனை அறியாதவர்களையும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக்

கீழ்ப்படியாதவர்களையும் தண்டிக்கும்படி இயேசு திரும்ப வருகிறார் என்று சொல்லுகிறார். மேலும், பேதுரு இப்படியாகக் கேட்கிறார். நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்குங் காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்? நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்? (I பேதுரு 4:17,18) இதற்கு தெளிவான பதில் இருக்கிறது.

மனுஷனும், மனுஷியும் ஏதேன் தோட்டத்தில் தேவனுக்குக் கீழ்ப்படியாத போது அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு அவர்கள் பாவிகளானார்கள். ஆதாம், ஏவாளுடைய பாவத்தை சுமந்து கொண்டு யாரும் பிறவாத போதிலும், ஒருவன் நன்மை, தீமையை அறிந்து கொள்ளும் வயது வரும்போது அவன் பாவியாகிறான். பவுல் சொல்லும்போது, எல்லாரும் பாவஞ் செய்து தேவ மகிமையற்றவர்களாகி என்றும், பாவத்தின் சம்பளம் மரணம் ரோமர் 3:23; ரோமர் 6:23 வசனங்களில் சொல்லியிருக்கிறார். அது உண்மையாக இருந்தாலும், தேவனுடைய சித்தத்திற்கு ஒரு பாவி கீழ்ப்படிந்தால் (மாற்கு 16:16) அவன் இரட்சிக்கப்பட முடியும், மேலும் அவன் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்தொடர்ந்தால், இயேசு கிறிஸ்துவின் இரத்தம் அவன் பரலோகத்தில் இரட்சிக்கப்படும்படி சகல பாவங்களையும் கழுவிச் சுத்திகரிக்கும் (1யோவான் 1:7).

ஆனால், ஒரு பாவி எப்படி தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ள முடியும்? அவன் போதிக்கப்பட வேண்டும். எனவே தான் கர்த்தர் அப்போஸ்தலர்களுக்கும், அவர்களைப் பின்பற்றுபவர்களுக்கும் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று கட்டளையிட்டார் (மாற்கு 16:15). நாம் சகல ஜாதிகளுக்கும் உபதேசம் பண்ண வேண்டும் என்று மத்தேயுவில் சொன்னார் (மத்தேயு 28:19,20). ஆனால், மனிதன் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டிருந்தால் ஏன் இதைச் செய்ய வேண்டும்?.

கர்த்தர் தம்முடைய சித்தத்தை அறியாதவர்களை இரட்சித்துக் கொண்டு, சுவிசேஷத்தை அவர்களுக்கு எடுத்துச் சொல்லாததினால் கீழ்ப்படியாமைக்காக நம்மை ஆக்கினைக் குள்ளாகத் தீர்த்தால் எப்படி இருக்கும் என கற்பனை செய்து பாருங்கள்!. அதன்பின்பு சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய அவர்களுடைய தொடர் தோல்வியினால் அவர்கள் இழந்து போகிறதற்கு காரணமாகின்ற சுவிசேஷத்தை அவர்களிடத்தில் எடுத்துச் சென்றால் என்னமாயிருக்கும்? என்ன கலப்பான உலகமாக அது இருக்கும்! இரட்சிக்க உத்தேசித்திருக்கிற செய்தி உண்மையிலேயே ஆக்கினையாக மாறிவிடும். ஆனால், உண்மை என்னவென்றால் அறியாமையுள்ளவர்கள் தங்கள் பாவங்களினால் ஏற்கனவே இழந்து போய்விட்டார்கள். அவர்களுடைய ஒரே நம்பிக்கை நாம் அவர்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்வது தான். ஒரு மனிதன் அறியாமையில் இரட்சிக்கப்பட முடியுமென்றால் நம்முடைய அருமை இரட்சகராகிய இயேசு எதற்காக சிலுவையில் மரித்து இரட்சிப்பிற்கான கிரயத்தை செலுத்தி, நித்திய ஜீவனின் நம்பிக்கையை ஏன் கொடுக்க வேண்டும்? அந்த விஷயத்தில்

அறியாமை கிறிஸ்துவின் இரத்தத்தை விட மிகவும் வல்லமையுள்ள இரட்சிக்கிற ஒன்றாக மாறிவிடும்!

ஆனால், யாருமே பாவத்தில் இரட்சிக்கப்பட முடியாது. அதைப் போலவே யாருமே அறியாமையில் இரட்சிக்கப்பட முடியாது. மேலும், தேவனை அறியாதவர்களுக்கு சுவிசேஷத்தைக் கொண்டு செல்ல நாம் தவறினால், தங்கள் பாவங்களிலிருந்து எப்படி இரட்சிக்கப்பட வேண்டும் என்கின்ற அறியாமையினால் அவர்கள் மாத்திரம் இழந்து போகிறதில்லை, நாமும் தேவனுக்கு கீழ்ப்படியாததால் நாமும் இழந்து போவோம். மறுமுனையில், நாம் அவர்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் சென்று அதற்கு கீழ்ப்படிய மறுத்ததினாலோ, தவறினதினாலோ அவர்கள் இழந்து போனால், இயேசு நம்மை எதைச் செய்ய கேட்டுக் கொண்டாரோ அதைச் செய்ததினால் நாம் இரட்சிக்கப்படுவோம்.

அப்போது இந்த முழு உலகமும் சிறந்த அறிவுள்ளதாக விளங்கும் என்பதை நாம் உணர்ந்து கொள்வோம். உதாரணமாக, வேதாகமம் உலகில் உள்ள அநேக மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு உலகமுழுவதும் பிரதிகள் விநியோகிக்கப்படுகின்றன. கத்தோலிக்க மற்றும் புரோடஸ்டன்ட் சபைகள் தங்கள் ஊழியர்களை உலக முழுவதும் அனுப்பி, ஜனங்களிடத்தில் குறைந்தபட்சம் தேவன் ஒருவர் இருக்கிறார், இரட்சகர் இருக்கிறார் என்றும், வேதாகமம் அவர்களுக்கான செய்தி என்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

நிச்சயமாகவே, கிறிஸ்துவின் சபையாரால் ஸ்தல ஊழிய முயற்சிகள் மற்றும் அஞ்சல் வழி பாடம் போன்றவைகளால், அநேக போதனைகள் செய்யப்படுகின்றன. கிறிஸ்துவின் சபைகள் உலகின் முக்கியமான நாடுகளில் இருக்கின்றன, முக்கியமான பட்டணங்களிலும், எண்ணற்ற சிறிய பட்டணங்களிலும் காணப்படுகின்றன.

இந்த உண்மைகளோடு கூடுதலாக இலக்கிய பதிப்புகளின் விநியோகம், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இன்னும் எண்ணற்ற வழிகளில் கிறிஸ்துவின் போதனைகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. வேதாகம செய்தி பகுதியாகவோ, தவறாகவோ, அல்லது அதன் முழு சத்தியத்தோடு உலகில் உள்ள பெரும்பாலான மக்களிடத்தில் சென்றடைந்து இருக்கிறது, இது மக்கள் மத்தியில் மனிதன் இழந்து போயிருக்கிறான் அவனுக்கு இரட்சகர் ஒருவர் தேவை என்கின்ற உண்மையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டும். எனவே, இப்படிப்பட்டவர்களிடத்தில் சத்தியம் ஓரளவு அறிவிக்கப்பட்டிருக்கிறபடியால் அவர்கள் தொடர்ந்து அதைப்பற்றிய அறிவை ஏன் வளர்த்துக் கொள்ளவில்லை என்று தேவன் இவர்களிடத்தில் கணக்குக் கேட்பார், இதை நியாயத்தீர்ப்பு தான் வெளிப்படுத்தும்.

ஆனால் நிச்சயமாகவே தேவனுடைய வார்த்தையை எடுத்துச் சென்று இரட்சிப்பின் சுவிசேஷத்தை ஒவ்வொருவருக்கும் அறிவித்து நம்முடைய வேலையை முடிப்பது நம் கடமையாக இருக்கிறது. அறியாமை அல்ல - கிறிஸ்துவின் இரத்தமே பாவத்திலிருந்து ஆத்துமாவை இரட்சிக்க முடியும்.

**J.C. சோட்**

பெண்கள் பகுதி

# யோவான் மாற்குவின் தாய்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! இவ்வருடத்தின் இறுதி மாதத்தில் நின்றிருக்கும் உங்களுக்கு இறைமகன் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்களையும், நன்றி களையும் கூறிக்கொள்கிறேன். தேவன் நம்மீது பொழிந்தருளின அன்பு, கிருபை, இரக்கம் ஆகியவைகளினால் இந்த ஆண்டை ஓரளவு முடிக்கச் செய்தார். இம்மாதம் அப்போஸ்தலர் நடபடிகள் 12:12-ல் இடம் பெற்றுள்ள சகோதரி மரியாள் அவர்களிடமிருந்து நாம் சில பாடங்களைக் கற்றுக்கொள்வோம்.

அவன் இப்படி நிச்சயித்துக் கொண்டு, மாற்கு என்னும் பேர் கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் வீட்டுக்கு வந்தான்; அங்கே அநேகர் கூடி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். (அப். 12:12).

அப்போஸ்தலர் புத்தகம் சபை சரித்திரம் பற்றி பேசும் புத்தகம். இயேசு கிறிஸ்து மத். 16:18-ல் வாக்குரைத்த கிறிஸ்துவின் சபை அப். 2-ம் அதிகாரத்தில் அதிகாரப்பூர்வமாக ஸ்தாபிக்கப்பட்டது. இயேசுவை அங்கீகரிக்காத இந்தப் பொல்லாத யூதர்கள், பரிசேயர், சதுசேயர் போன்றோர் அவருடைய அப்போஸ்தலர்களையும் விட்டுவைக்கவில்லை. துன்புறுத்தல், அச்சுறுத்தல், காவல் என்று பல உபத்திரவங்களை செய்தார்கள். ஆனாலும், இவைகள் எதுவும் சபை வளர்ச்சியைத் தடை செய்ய முடியவில்லை. 4-ம் அதிகாரத்தில் இயேசுவின் நாமத்தை பேசக்கூடாதென்று பேதுருவும், யோவானும் உறுதியாய் பயமுறுத்தப்பட்டும், கட்டளை பெற்றும், அவைகள் தேவ வசனத்தை தைரியமாய்ச் சொல்வதை நிறுத்தவில்லை. 5ம் அதிகாரத்திலும் அப்போஸ்தலர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனை சங்கத்தை விட்டுப் புறப்பட்டுப் போய், தினந்தோறும், தேவாலயத்திலேயும், வீடுகளிலேயும் இடைவிடாமல், உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள் (5:41,42).

இந்த சம்பவங்கள் நடந்த பிறகு, அப். 12ம் அதிகாரத்தில் புது விதமான துன்புறுத்தல் ஆரம்பமானது. ஏரோது ராஜா பற்றி நாம் அனைவரும் நன்கு அறிவோம். இந்த ஏரோதுவும் சபையை துன்பப்படுத்தத் தொடங்கி யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலை செய்தான். இது யூதருக்குப் பிரியமாயிருக்கிறதென்று கண்டு பேதுருவையும் பிடிக்கத் தொடர்ந்தான். சிறையில் அடைத்தான்.

யாக்கோபுக்கான துக்கம் முடியாத நிலையில் மீண்டும் பேதுருவை சிறையில் போட்ட செய்தி கிறிஸ்தவர்களால் தாங்கவே முடியவில்லை. செய்தி உடன் பரவியது. ஒருவேளை பேதுருவை யும் கொன்றுவிடுவார்களோ? பஸ்கா பண்டிகை முடிந்து கொலை செய்வார்களோ? சரி, நாம் கூடி அவருக்காக ஜெபிக்கலாம். எங்கே? மரியாள் வீட்டுக்குச் செல்லலாம். அவள் எப்போதும் ஜெபிப்பதற்கு தன் வீட்டை சபையாருக்கு முன்வந்து கொடுப் பாள் என்று விசுவாசிகள் பேசி, 12-12-ன் படி யோவான் மாற்கு வின் தாயாகிய மரியாள் வீட்டில் கூடி ஜெபித்தார்கள். அவள் கணவன் பெயர் சொல்லப்படாததால் ஒருவேளை அவள் ஒரு விதவையாய் இருந்திருக்கலாம். சற்று வசதியுள்ளவளாகவும் இருந்திருக்கக் கூடும். ஒரு வேலைக்காரப் பெண்ணும் இவளுக்கு இருந்திருக்கிறாள். அநேகர் கூடி ஜெபிக்கும்படியான பெரிய வீடு இருந்திருக்கிறது. அப்போஸ்தலர் 1ம் அதிகாரம் 14ம் வசனத்தில் கூடி ஜெபித்த ஸ்தீரிகளோடு இந்த மரியாள் இருந்திருக்கிறாள் என்று தெரிகிறது. இயேசுவின் ஊழிய நாட்களில் அவரோடு பயணம் செய்து, தங்கள் உடைமைகளை கொடுத்த ஸ்திரீகளுள் இந்த மரியாள் ஒருவளாகவும் இருக்க வாய்ப்பு இருக்கிறது.

இவள் யோவான் மாற்குவின் தாய். பர்னபாவும், மாற்கு வும் இனத்தான் என்று கொலோ. 4:10-ல் வாசிக்கிறோம். மரியாள் பர்னபாவுக்கு அத்தை முறை உறவு ஆகிறது. யோவான் மாற்கு ஓர் அப்போஸ்தலனாயிராவிட்டாலும், இயேசுவின் சீசனாக இருந்தவன். பேதுருவால் ஒருவேளை இவள் மனமாற்ற மடைந்தபடியால் பின்நாட்களில் பேதுரு இவனை என் குமாரனா கிய மாற்கு என்று 1 பேதுரு 5:13-ல் கூறுகிறார்.

இவள் தாயாகிய மரியாளைப் பற்றி நிறைய உண்மைகள் நமக்குத் தெரியாது. இவள் வயது, குடும்பப் பிண்ணனி, தொழில் ஒன்றும் தெரியாது. ஆனால், ஒன்றே ஒன்று தெரிகிறது. ஆம், மிகவும் தைரியமாக, விசுவாசமாக தன் வீட்டை, அந்த இக்கட் டான நேரத்தில் ஜெபத்திற்காக கொடுத்தாள் என்று. ஒருவேளை ஏரோது வலைவீசி பெண்களையும் கைது செய்திருக்கலாம். மரியாள் வீட்டையும் வந்து பார்த்திருக்க வாய்ப்பு இருந்தது. ஆனாலும், பேதுரு சிறையில் உறங்கிக் கொண்டிருந்த போது அவனுக்காக ஜெபிக்கும்படி தன் வீட்டை கொடுத்தாள்.

## ஜெபம் கேட்கப்பட்டது

ஊக்கத்தோடு கூடிய ஜெபம் (12:5) தேவனை வேலை செய்ய வைத்தது. கர்த்தருடைய தூதன் வந்து பேருதுவை எழுப்ப அவன் கைகளில் இருந்த சங்கிலிகள் விழுந்தது.

(மரியாள் வீட்டில் கிறிஸ்தவர்கள் ஜெபித்துக் கொண்டிருந் தார்கள்).

முதலாம், இரண்டாம் காவலைக் கடந்து, தானாய் திறந்த இருப்புக் கதவின் வழியாக நகரத்தின் வீதியிலே நடந்து வந்தார்கள்.

(இன்னும் மரியாள் வீட்டில் ஜெபம் நடந்து கொண்டுதான் இருக்கிறது)

வெளியே வந்த பேதுரு நேராக மரியாள் வீட்டிற்கு வந்தாள். (அங்கே நடந்து கொண்டிருந்தது).

அருமையானவர்களே! மரியாளின் விசுவாசம் எவ்வளவு பெரிய அற்புதத்தை நடத்திவிட்டது பாருங்கள்! இந்த வருடத்தின் இறுதியில் இருக்கும் நாம் யோவான் மாற்குவின் தாயாகிய மரியாளிடமிருந்து இரண்டு பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும்.

1. ஜெபம்

2. பிள்ளைகளை விசுவாசத்தில் வளர்த்தல்.

ஜெபம் : இடைவிடாத, ஒருமனப்பட்ட ஜெபம் இவர்களால் ஏறெடுக்கப்பட்டது. நாமும் கிறிஸ்தவர்களாக இருந்து கொண்டு ஒருவருக்காக ஒருவர் அடிக்கடி அதுவும் நம் சகோதர, சகோதரிகள் பிரச்சனையில் இருக்கும்போது ஜெபிக்க வேண்டும். ஜெபம் ஒருவரையொருவர் தாங்கி ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்க வைக்கிறது. தனி ஜெபம் முக்கியமானதாக இருந்தாலும் சபைக்காக, சபை வளர்ச்சிக்காக, பாவத்திலே வாழும் மக்களுக்காக விசுவாசிகள் ஒன்றாக சேர்ந்து ஜெபிக்க வேண்டும். (அப். 4:24-31; 6:4; 8:24). இதை அப். பவுல் எபே. 6:8; பிலி. 4:6; கொலோ. 4:2-ல் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார். இதை மரியாள் தன் வீட்டில் நடைமுறைப்படுத்தியிருக்கிறார்.

பிள்ளைகளை விசுவாசத்தில் வளர்ப்பது : இந்த வேலை பெற்றோருக்கு ஒரு முக்கியமான, இன்றியமையாத வேலை. எந்த வயதில் யோவான் மாற்கு கிறிஸ்தவனாக மாறினான் என்பது நமக்குத் தெரியாது, ஆனால், அப். 13-ம் அதிகாரத்தில் விசுவாசத்தில் பெலவீனமாயிருந்த யோவான் மாற்கு, II தீமோ. 4:11-ல் எப்படி பிரயோஜனமாயிருந்தான் என்பது நமக்கு தெரியும். இயேசுவின் வாழ்க் கை வரலாற்றை எழுதும் சிலாக்கியம் இவனுக்குக் கிடைத்தது. இதற்கெல்லாம் ஓர் அடிப்படைக் காரணம் அவசியம் இருந்திருக்க வேண்டும். கட்டாயமாக அவருடைய தாய் தேவனுடைய அன்பை கற்றுக் கொடுத்திருக்க வேண்டும். இயேசுவோடு கூட ஊழியம் செய்யவும், பர்னபா, சவுல் (அப். 12) போன்றவர்களோடு சேர்ந்து பயணம் செய்யவும் இவனுடைய தாய் இவளை உற்சாகப்படுத்தியிருக்க வாய்ப்புண்டு.

ஒருவேளை நம் குழந்தைகள் எங்கு வேண்டுமானாலும், எந்த வேலை வேண்டுமானாலும் செய்கிறவர்களாக இருக்கலாம். ஆனால், என்ன செய்தாலும், எங்கிருந்தாலும் ஒரு கிறிஸ்தவனாக வாழவும், கிறிஸ்துவுக்காக வேலை செய்கிறவனாக இருக்கவும் கிறிஸ்தவனைப் போல் பேசவும் கற்றுக் கொடுக்க வேண்டும். தேவனை நேசித்து, அவருக்காக சேவை செய்யப் பழக்க வேண்டும். இதைத் தான் மரியாள் யோவான் மாற்குவிடம் எதிர்பார்த்திருந்தாள்.

அருமையானவர்களே, கட்டாயமாக நாமும் கூட இந்த மரியாளை ஒருவேளை இந்த அளவு அறியாமல் இருந்திருந்தாலும், இப்பொழுது அவளுடைய விலையேறப் பெற்ற குணாதிசயங்களைப் பார்த்தோம். நாமும் மரியாளைப் போன்று நம் வீட்டை ஜெப வீடாக்கி, கிறிஸ்துவின் சபையின் வளர்ச்சிக்காக போராடி ஜெபிப்போம். கர்த்தர் நமக்குக் கொடுத்த பிள்ளைகளை அவர் வேலை செய்ய ஒப்புக்கொடுப்போம்.

**ரேச்சல் இராஜநாயகம்**

**“ உங்களுக்கு எனது புத்தாண்டு வாழ்த்துக்கள் 2011 ”**

## கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் செய்ய வேண்டிய காரியங்கள்

1. அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள் (கலாத்தியர் 5:13)
2. ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திச் சொல்லுங்கள் (கொலோசெயர் 3:16)
3. ஒருவரையொருவர் தேவனுடைய வார்த்தைகளினாலே தேற்றுங்கள் (1 தெசலோனிக்கேயர் 4:18)
4. ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள் (1பேதுரு 4:10)
5. முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள் (1 பேதுரு 4:9)
6. ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருங்கள் (1 யோவான் 1:7)
7. ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள் (யாக்கோபு 5:16)

வாலிபர் பகுதி

# வாழ்க்கையில் மகத்தானவைகள்

வருடத்தின் இறுதியில் வண்ணமிகு வருடத்திற்காக வழி மேல் விழிவைத்து காத்துக் கொண்டிருக்கிற வாலிபர்களுக்கு வானவராம் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். பொதுவாக வே, வாலிபர்களுக்கு வாழ்க்கையில் எதையாவது சாதிக்க வேண் டும் என்கின்ற தணியாத தாகம் இருக்கும். இந்த உலகத்தில் மகத்தான காரியங்களை செய்து, பெயரை பின்வரும் சந்ததி யாரும் சொல்ல வேண்டும் என்கிற வாஞ்சை வாலிபர்களிடம் காணப்படும் ஒன்றே. வாலிபர்களாகிய நாம் மகத்தானவைகள் என கருதுபவைகளை தேவன் மகத்தானவைகள் என்று கருதுவ தில்லை. ஆகவே, இப்போது தேவன் தமது பரிசுத்த வாக்கியங் களில் எவைகளெல்லாம் மகத்தானவைகள் என்று சொல்லியிருக் கிறார் எனப் பார்த்து அவைகளைச் செய்து வாழ்வில் வளம் பெறுவோம்.

1கொரிந்தியர் 13:13-ல் பவுல் இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது என்று சொல்கிறார். இன்றைய உலகில் அன்பு ஒரு மிகப்பெரிய மகத்துவம் வாய்ந்த சக்தி என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இந்த உலகமே அன்பினால் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. அன்பு தியாகம் செய்கிறது; சிறந்தவைகளைத் தருகிறது; பாரங்களை இலகுவாக்குகிறது; அன்பிற்கு அளவே இல்லை என்றெல்லாம் அன்பைப் பற்றி சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட அன்பு நிச்சயமாகவே வாழ்க்கையில் மகத்தானது.

ஒரு வாலிபனுடைய வாழ்க்கையில் வரையறையில்லாத நோக்கம் தேவனை மகிமைப்படுத்துவதுதான். நாம் சொல்கின்ற, செய்கின்ற யாவிலும் தேவனை மகிமைப்படுத்துவது நம் நோக்க மாக இருக்க வேண்டும். 1கொரிந்தியர் 10:31ல் பவுல், “ஆகை யால், நீங்கள் புசித்தாலும், குடித்தாலும் எல்லாவற்றையும் தேவ னுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்” என்று சொல்கிறார். உங்கள் வாழ்க்கை தேவனுக்கு மகிமையைக் கொண்டு வருகிறது என்று உங்களால் சொல்ல முடியுமா?.

ஒரு வாலிபனுடைய வாழ்க்கையில் மகத்தான சிலாக்கியம் தேவனுடைய பிள்ளையாக இருப்பதுதான். இப்பிரபஞ்சத்தை உண்டாக்கின தேவன் நம் தகப்பனாக இருப்பது எத்தனை மகத் தான காரியம். இதைக் குறித்து எப்பொழுதாவது நீங்கள் ஆச்சரி யப்பட்டதுண்டா? அன்பின் அப்போஸ்தலனாகிய யோவான் இது பற்றி இவ்விதமாகச் சொல்கிறார். “ நாம் தேவனுடைய பிள்ளை களென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள் ” (I யோ வான் 3:1) என்று.

ஒரு வாலிபனுடைய வாழ்க்கையில் மகத்தான அறிவு தேவனைப் பற்றிய அறிவும், கிறிஸ்துவைப் பற்றிய அறிவும் தான். யோவான் 17:3-ல் இயேசு இவ்விதமாகச் சொன்னார் ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய

இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன். உங்களுக்கு ஒருவேளை உயர் கல்வி இருக்கலாம். நீங்கள் உங்களை அறிவாளிகளாக நினைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால், இயேசுவைப் பற்றிய அறிவு இல்லையென்றால் நீங்கள் அறிவாளிகள் அல்ல! தேவனைப் பற்றியும் கிறிஸ்துவைப் பற்றியும், கிறிஸ்துவின் உபதேசம் மற்றும் சபை பற்றி உங்களுக்குத் தெரியுமா?.

ஒரு வாலிபனுடைய வாழ்க்கையில் மகத்தான வேலை கிறிஸ்துவுக்காகச் செய்யும் வேலைதான். அநேக வாலிபர்கள் இந்த உலகத்தில் உள்ள முன்னணி நிறுவனங்களில் வேலை செய்ய ஆசையாயிருக்கிறார்கள். ஆனால், இந்த உலகில் எத்தனையோ கோடிக்கணக்கான மக்கள் ஆத்தும இரட்சிப்படையாமல் மடிந்து மண்ணோடு மக்கிப் போனார்கள். அவர்களைப் பற்றிய பாரம் நமக்கிருக்கிறதா?. எஞ்சி இருக்கின்ற ஆத்துமாக்களையாவது கிறிஸ்துவுக்காய் ஆதாயம் செய்ய வேண்டும். இந்த உலகிலுள்ள எல்லாவற்றைப் பார்க்கிலும் விலையேறப்பெற்றது ஆத்துமாதான். ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன் என்று சாலொமோன் சொல்கிறார் (நீதிமொழிகள் 11:30).

ஒரு வாலிபனுடைய வாழ்க்கையில் மகத்தான மிகப்பெரிய நஷ்டம் ஆத்துமாவை இழப்பது தான். ஒருவன் பொன்னையோ, பொருளையோ, இழந்துவிட்டால் அவன் பெரிதாக ஒன்றையும் இழந்து விடுவதில்லை. ஆனால், ஆத்துமாவை இழந்து விட்டால் அவன் எல்லாவற்றையும் இழந்துவிட்டவனாகிறான். மத்தேயு 16:26-ல் இயேசு இவ்விதமாகச் சொன்னார். மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?.

எனவே, வாலிப உள்ளங்களே நீங்கள் வாழ்க்கையில் எதைச் சாதித்திருந்தாலும், சம்பாதித்திருந்தாலும் உங்கள் ஆத்துமாக்களை இழந்திருந்தால் நீங்கள் ஒன்றுமில்லை. நாம் முதலில் நம்முடைய ஆத்துமாவை ஆதாயம் செய்தால் தான் ஆத்துமாவில் மரித்திருக்கிற மற்றவர்களை தேவனுடைய வார்த்தையைக் கொண்டு உயிர்ப்பிக்க முடியும்.

பிரியமான வாலிபர்களே! இதுவரை நீங்கள் இந்த உலகத்தில் மகத்தான காரியங்கள் என எவைகளை நினைத்திருந்தாலும் பரவாயில்லை. பவுல் சொன்னதுபோல, பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருவோம் (பிலிப்பியர் 3:13,14). நாம் இதுவரை பார்த்த காரியங்கள் தான் தேவனால் மகத்தானவைகள் என கருதப்படுகின்றன. உலகம் நம்மை எப்படிப் பார்த்தாலும் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம், தேவனால் மகத்தானவைகள் எனக் கருதப்படுகின்றவைகளை நாம் நடைமுறைப்படுத்தி நசரேயனாகிய இயேசுவின் நல் நாமத்திற்கு மகிமையைக் கொண்டுவருவோம். அதற்கு கர்த்தர் வரப்போகும் புதிய ஆண்டில் உதவி செய்வாராக! ஆமென்.

பென்னிமார்ட்டின்

சிறுவர் பகுதி

# தண்ணீர் திராட்சை ரசமாக....

எனதருமை சிறு தம்பி, தங்கைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவரும், மீட்பருமாகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துதல் சொல்கிறேன். நீங்கள் அனைவரும் இயேசுவிற்கு பிரியமாக நடந்து கொள்வீர்கள் என நான் நம்புகிறேன். மாதந்தோறும் வெளிவரும் கதைகளும், பாடங்களும் உங்களுக்குப் பயனுள்ள தாக இருக்கும் என நம்புகிறேன். இந்த மாதம் இயேசு செய்த அற்புதத்தை ஆராய்ந்து அதிலிருந்து சில பாடங்களை கற்றுக் கொள்ள முயற்சிப்போம். வாருங்கள்!.

நீங்கள் சமீபத்தில் ஏதாவது திருமண வீட்டிற்கோ அல்லது திருமண விருந்திற்கோ போனீர்களா? அப்படிப் போயிருந்தால் நீங்கள் சிலநேரம் அங்கே இருந்து விருந்து உண்டபின் வந்திருப் பீர்கள். ஆனால், பாருங்களேன், புதிய ஏற்பாட்டு காலத்தில் திருமண காரியங்கள் வித்தியாசமாக நடந்துள்ளது.

அப்படி என்ன வித்தியாசம் என்கிறீர்களா? தொடர்ந்து படியுங்கள். கல்யாண வீட்டிலே மிகப்பெரிய விருந்து ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும். அது ஒரு வாரம் வரை நீடிக்கும். பொது வாக, நண்பர்கள், உறவினர்கள், பாட்டுப்பாடி மகிழ்விப்பவர்கள் என யாவரும் வந்திருப்பார்கள். இதைவிட முக்கியம் வந்த அனைவருக்கும் திருமண வீட்டார் போதுமான அளவு விருந்து கொடுக்க வேண்டும்.

அப்படியொரு திருமணத்திற்குத்தான் நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து சென்றார். அங்கே திராட்ச ரசம் தீர்ந்து போ யிற்று. இயேசுவின் தாயாகிய மரியாளுக்கு இயேசுவின் உதவி தேவைப்பட்டது. அங்கே இருந்தவர்கள் யாரும் அற்புதத்தை பார்த்ததில்லை. ஆனால் அவளோ அவரை நம்பினாள். எனவே வேலைக்காரரிடம் "*இவர் சொல்வதை எல்லாம் செய்யுங்கள்*" என்று கூறினாள்.

யூதர்களுடைய வீட்டிலே கற்களால் ஆன ஜாடிகள் இருந்தன. அவைகளை தண்ணீர் சேகரிக்க வைத்திருப்பர். அவை களில் இயேசு தண்ணீர் நிரப்பச் சொன்னார். அந்த வேலைக் காரரும் அப்படியே செய்தார்கள். ஆனால், "அற்புதமாக" அவை திராட்ச ரசமாக மாறின. அதை அவர் தம் கையால் தொட வில்லை. தண்ணீர் அற்புத விதமாக திராட்ச ரசமாக மாற வேண்டும் என நினைத்தார். அது நடந்தது.

பின்பு வேலைக்காரர், அதை எடுத்து பந்தி விசாரிப்புக்காரரிடத்தில் இயேசு கட்டளையிட்டபடியே கொடுத்தார்கள். அது எங்கிருந்து வந்ததென்று பந்தி விசாரிப்புக்காரனுக்கு தெரியாதிருந்தது.

அதை ருசித்த போது, "நீரோ நல்ல ரசத்தை இதுவரை வைத்திருந்தீரே" எனக் கூறி வாழ்த்தினான். (யோவான் 2:10) என்ன அற்புதம் பாருங்கள்! தண்ணீரை திராட்ச ரசமாக மாற்றினார். இது இயேசு செய்த முதலாம் அற்புதம்

சரி, இதிலிருந்து என்ன பாடம் நமக்கு கிடைக்கிறது? இயேசு சொன்ன காரியம் உண்மையென்றும், அவர், தான் தேவனுடைய குமாரன் என்றும் மற்றவர்கள் நம்புவதற்கு அற்புதங்கள் தான் சான்றுகளாக இருந்தன. இப்படிப்பட்ட இயேசுவை ஆண்டவராகக் கொண்டிருப்பது நிச்சயமாக நமக்கு ஓர் ஆசீர்வாதம். எனவே, அந்த ஆசீர்வாதத்தை தவறாமல் காத்துக்கொள்வது அவசியம். அதை பத்திரப்படுத்த இச்சிறுவயதிலிருந்தே முயற்சிப்போம். புதிய ஆண்டில் இந்த இயேசுவுக்குப் பிரியமானவர்களாக வாழ்வோம்.

தேவன நம்மை ஆசீர்வதிப்பார்!

**ABEL. R. NAYAGAM**

அனைவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

## சத்தியம்

1. **சத்தியம் நம்மை விடுதலையாக்கும் [யோவான் 8:32]**
2. **சத்தியத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியும் [எபேசியர் 3:3,4]**
3. **சத்தியம் குறைவற்றது [சங்கீதம் 19:7]**
4. **சத்தியம் என்றென்றும் நிலைத்திருக்கும் [மத்தேயு 24:35]**
5. **சத்தியம் நம்மை சுத்தம் செய்யும் [சங்கீதம் 119:9]**
6. **சத்தியம் வல்லமையுள்ளது [எபிரெயர் 4:12,13]**
7. **சத்தியம் பக்தி விருத்தி அடையச் செய்யும் [அப்போஸ்தலர் 20:32]**

# “ துருவின் சாட்சி ” நூலில் இருந்து
# பாடம் - 6 துருவின் சாட்சி

## நோக்கம்

ஒரு போதும் துரு பிடிக்காத பொன்னையும், வெள்ளியையும் தான் நாம் பரலோகத்திற்கு நமக்கு முன்பாக அனுப்ப முடியும் என்பதை மனதில் இருத்துவது.

## உங்கள் சிந்தனைக்கு

உங்கள் பணத்தை எப்பொழுதும் நீங்கள் எண்ணி கணக்குப் பார்ப்பதற்குப் பதிலாக, அந்தப் பணம் உங்களுக்காகப் பேசுவதற்கு நீங்கள் ஏன் அனுமதிக்கக் கூடாது?

## முன்னுரை

ஒரு சட்ட வல்லுநரின் கடமை குற்றவாளி மீது சுமத்தப்பட்ட எல்லாக் குற்றங்களையும் மோசமான நடத்தைகளையும் விசாரித்து, அவன் மிகப்பெரிய தவறுகள் செய்திருந்தால் கடைசியாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி தண்டனை வழங்குவதாகும். நம்முடைய பரலோக நியாதிபதியும் இப்படியாக நீதியை விசாரித்து இந்த தீர்ப்பை வழங்கியிருக்கிறார். “ ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள் மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள். உங்கள் ஐசுவரியம் அழிந்து உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப் போயின. உங்கள் பொன்னும், வெள்ளியும் துருபிடித்து; அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருக்கிறது. அக்கினியைப் போல உங்கள் மாம்சத்தைத் தின்னும் கடைசி நாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள். இதோ, உங்கள் வயல்களை அறுத்த கூலிக்காரருடைய கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில் பட்டது. பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள்; கொழுத்தவைகளை அடிக்கும் நாளிலே நடக்கிறது போல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள். நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொலை செய்தீர்கள்; அவன் உங்களோடே எதிர்த்து நிற்கவில்லை” (யாக்கோபு 5:1-6).

## I நியாயத்தீர்ப்பின் போது ஒரு காட்சி

முதல் குற்றச்சாட்டு, உங்களுடைய பொன்னும், வெள்ளியும் துருபிடித்து உங்களுடைய வஸ்திரங்கள் பொட்டரித்துப் போயிற்று. இது இன்று உலகத்திலே குவிக்கப்பட்டிருக்கும் பொன், வெள்ளி போன்றவைகளின் பயங்கரமான சித்திரம் நியாயத்தீர்ப்பின் காட்சியாக நம்முடைய கண்களில் நாம் இதைக்

காணும் போது நடுக்கம் ஏற்படுகிறது. இயேசுவின் சிலுவையைப் பற்றி இந்த முழு உலகத்திற்கும் எடுத்துச் செல்லப் போதுமான செல்வம் நம் சகோதரர்களிடத்தில் இருக்கிறது. இந்த செல்வத்தை "சுயம்" என்னும் பலிபீடத்தில் நம் சகோதரர்கள் வைப்பதற்கு பதிலாக "தேவனுடைய பலிபீடத்தில்" வைத்தால் தான் இது சாத்தியம்.

என்னுடைய மனதிலே மகாநியாயத்தீர்ப்பின் காட்சியை என்னால் பார்க்க முடிகிறது. நாள் வந்து விட்டது. சூரியன் ஒளி கொடுக்க மறுக்கிறது. சந்திரன் இரத்தமாக மாறுகிறது, நட்சத்திரங்கள் வானத்திலிருந்து கீழே பூமியில் விழுகிறது; மலைகளெல்லாம் அதினதின் இடத்திலிருந்து அசைகின்றது. தேவனுடைய சிங்காசனம் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது. அந்த மகாநாளில் நாம் இந்த உலகத்தில் எப்படி பணத்தை செலவழித்தோம் என்று தேவனிடத்தில் கணக்கொப்புவிக்க அவருக்கு முன்பாக நிற்கிறோம்.

தேவனிடம் கணக்கொப்புவிக்கும்படி தேவனால் அழைக்கப்பட்ட மனிதன் ஒருவன் நிற்கிறான். தேவன் அவனை சாட்சியின் இருக்கைக்கு அழைக்கிறார். அவனுடைய காலின் கீழ் குவிக்கப்பட்டிருக்கிற கெட்டுப்போன செல்வத்தை உள்ளடக்கிய ஒரு குவியலை சுட்டிக்காட்டி "அது என்ன" என்று தேவன் கேட்கிறார். அதற்கு அந்த மனிதன் சோகமாக கீழே பார்த்துக் கொண்டு "அது செல்வம்" என்று சொன்னான். மறுபடியும், தேவன் அவனைப் பார்த்து அந்த செல்வம் ஏன் கெட்டுப்போனது என்று கேட்டார். அந்த மனிதன் எனக்குத் தெரியாது என பதில் அளித்தான். அதற்கு தேவன், "இங்கே ஏதோ மிகப்பெரிய தவறு நடந்திருப்பது உனக்குத் தெரியாதா?" என்று கேட்டார். செல்வமானது பயன்படுத்தபட்டால் அது கெட்டுப் போவதில்லை. அதை நீ ஏன் பயன்படுத்தவில்லை? நீ ஏழைகளுக்கு என்ன செய்தாய்? விதவைகளுக்கும், திக்கற்றவர்களுக்கும் நீ என்ன செய்தாய்? தன்னிடம் வரும் நீரை வெளியே அனுப்ப வழியில்லாத சவக்கடல், தன்னை நோக்கி வரும் ஆறுகளின் நீரை எப்பொழுதும் பெற்றுக்கொள்கிறது. அதினால் அது உப்பு நீராக மாறி உயிரினங்கள் வாழ்வதற்கு லாயக்கற்றதாக மாறி விடுகிறது.

சவக்கடலில் பிரயாணம் செய்பவர்கள் தாகத்தினால் சோர்வடைந்து மரித்தும் போவார்கள். அந்த தண்ணீர் குடிப்பதற்கு லாயக்கற்றதும் அதை குடித்தால் இன்னும் அதிகமான தாகத்தை ஏற்படுத்துவதாக இருக்கும். இந்த மனிதனின் செல்வமானது பயன்படாமல் அது தேங்கிக் கிடந்தது. கெட்டுப் போன உன்னுடைய செல்வம் ஏற்கனவே பேசிவிட்டபடியால் இப்போது நீ வாயைத் திறந்து பேசு என்று தேவன் சொன்னார்.

பரலோக நீதிமன்றத்தில் அந்த கைதி நடுங்கி முகநாடி வேறுபட்டது. "நான் எனக்காக சேர்த்து வைத்தது உண்மைதான்" என்று சொன்னான். "இவைகளை செய்யக்கூடாது என்று என் வார்த்தைகள் உன்னை எச்சரிக்கவில்லையா? என் வார்த்தைகள் தான் உன்னை கடைசி நாளில் நியாயம் தீர்க்கும் என்று உனக்குச் சொல்லப்படவில்லையா? என்று கேட்டார். (யோவான் 12:48).

மெதுவாக அந்த மனிதன் தன்னுடைய தலையை கீழே போட்டு மிகுந்த பரிதாபத்தோடு "கர்த்தாவே நான் குற்றவாளி யாக இருக்கிறபடியால் எனக்கு இரங்கி என்னைக் காப்பாற்றும்" என்று கதறினான்.

அதன் பின்பு இயேசு, "அந்த துருபிடித்த பணத்தையும், பொட்டரித்துப் போன வஸ்திரங்களையும் சுட்டிக் காட்டினார்". அவைகள் எல்லாம் அந்த மனிதனுடைய காலடியில் பயங்கர மான பிசாசைப் போல் தோற்றமளித்தன.

இயேசு தொடர்ந்து சொல்லும்போது, "பொன்னும், வெள்ளியும் நல்ல முறையில் பயன்படுத்தும் போது துரு பிடிக்கும் தன்மையை உடையவைகள் அல்ல. இந்த துரு, மற்றும் பொட்டரித்துப் போன வஸ்திரங்கள் பயன்பாட்டிற்கு அதிகமாக உன்னால் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதையே காட்டு கிறது. உன்னுடைய பணத்தை பதுக்கி வைத்ததால் இழந்துபோன ஆத்துமாக்களைப் பற்றி சிந்தித்துப்பார். சாட்சியாக இருந்த துரு உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறது. பிசாசுக்காகவும், அவனுடைய தூதனுக்காகவும் வைக்கப்பட்டிருக்கிற அக்கினி கடலுக்கு போ" என்பார்.

### II என்னுடைய பணம் உண்மையில் என்னுடையது தானா?

"வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்று சொல்கிறார் (ஆகாய் 2:8). பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது" (சங்கீதம் 24:1).

உண்மையென்னவென்றால், நமக்கு எதுவுமே சொந்த மில்லை, நம்முடைய பராமரிப்பின் கீழ் தேவனால் நம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருப்பவைகளுக்கு உக்கிராணக்காரர்களாகவே இருக்கிறோம். பணம் என்னுடையது. நான் இதை வைத்துக் கொண்டு நான் பிரியப்படுகிறபடி செலவழிப்பேன். நான் எப்படி பணத்தை செலவு செய்ய வேண்டுமென்று யாருமே எனக்கு சொல்ல முடியாது என்று சிலர் சொல்வதை நீங்கள் கேட்டிருக் கிறீர்களா? இப்படிப்பட்ட மனிதன் உணர்ந்து கொள்ள தவறும் காரியம் என்னுடையது எதுவும் என்னுடையதல்ல, அது தேவனு

டையது என்பதே. மனிதன் இந்த பணத்தை எப்படி செலவு செய்தான் என்பது குறித்து தேவனுக்கு கணக்கொப்பு விக்க வேண்டும்.

ஒரு மனிதனுடைய பண்ணையில், அவனுடைய நிலத்தையும், ஆடு மாடுகளையும், மரச்சாமான்களையும், வேறுசில உடமைகளையும் பார்த்துக் கொள்கிற ஒருவரை கற்பனை செய்து கொள்ளுங்கள். அவன் கணக்கு கொடுக்கும் நேரம் வந்தபோது, ஒரு கூடை நிறைய உளைக்கிழங்குகளை மட்டும் கொண்டுவந்து முற்றத்தில் வைத்து விட்டுப் போகும் போது எஜமானைப் பார்த்து அன்பாக கையசைத்து, அந்த எஜமானைப் பற்றி வருவோர், போவோரிடம் "அவர் நல்லவர்" என்று சொல்லிவிட்டால் இவன் ஒரு நல்ல உக்கிராணக்காரனாகி விட முடியுமா?.

அநேக வருடங்களுக்கு முன்பு குத்தகைக்கு பயிர் செய்த ஒருவர் தன்னுடைய எஜமானுக்கு குத்தகையாக பருத்தியில் நான்கில் ஒரு பகுதியையும், மக்காச் சோளத்தில் மூன்றில் ஒரு பகுதியையும் கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டார். ஆனால் அறுவடை முடிந்த பிறகும் குத்தகைக்கு பயிர் செய்த அந்த மனிதன் எஜமானுக்கு எந்த தகவலையும் தெரிவிக்கவில்லை. எஜமான் அவனை அழைத்து விளைச்சலைப் பற்றிக் கேட்ட போது குத்தகைக்கு பயிர் செய்தவன், எஜமானை பார்த்து, " நான் உங்களுக்கு ஒன்றும் தரவேண்டியதில்லை. இரண்டு லாரிகள் நிரம்பத்தக்கதாகத்தான் எனக்கு விளைச்சல் கிடைத்தது என்று சொன்னான்". நம்மில் அநேகர் தேவனுக்கு கொடுப்பது சம்பந்தமான காரியங்களில் இப்படித்தான் நடந்து கொள்கிறோம்.

பிரபு பைரோன் (Lord Byron), மனிதனின் நிலை பற்றிச் சொல்லும் போது, "மனிதன் இப்பூமியில் செலவழிக்கும் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் வாடகை கொடுக்கக்கூடியவனாக இருக்கிறான்". ஆனால், உண்மையென்னவென்றால், நாம் கணக்குக் கொடுக்க எப்போது அழைக்கப்படுவோம் என்பது நமக்கே தெரியாது. ஒரு நல்ல உக்கிராணக்காரன் என்பவன் தன்னுடைய எஜமான் தன் கணக்கு புத்தகத்தை பரிசோதனை செய்ய எந்த நேரத்திலும் ஆயத்தமாக இருப்பவன் தான். நம்மில் எத்தனை பேர் தேவன் நம்மிடத்தில் ஒப்புக்கொடுத்த பணத்தை நாம் எப்படி பயன்படுத்தினோம் என்று தேவனிடம் கணக்கு ஒப்புவிக்க எந்த நேரத்திலும் தயாராக இருக்கிறோம்? நம்மில் யாரையும் எப்போது வேண்டுமானாலும் அழைத்து கணக்கு கேட்க தேவனுக்கு எல்லா உரிமையும் உண்டு. ஒரு நாளில் நாம் கணக்குக் கொடுக்க வேண்டும்.

(தொடரும்)

## பாடம் - 2. சபைக்கு தேவனால் தரப்பட்டுள்ள மாதிரி (PATTERN)

தேவன் மனுக்குலத்திற்கு தமது திட்டத்தை வெளிப்படுத்தத் தமது தாசர்களிடத்தில் மாதிரியைக் கொடுப்பார் (Pattern). அந்த மாதிரிகளைக் கொண்டு தேவ மனிதர்கள் தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவார்கள். புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள சபைக்கும் தேவன் மாதிரியைக் கொடுத்துள்ளார். அதைக்குறித்து இந்த பாடத்தில் படிப்போம்.

### I பேழையின் மாதிரி (Pattern)

ஒரு காரியத்தைச் செய்ய மாதிரி என்பது அவசியமானது. உதாரணமாக ஒரு தையற்கலைஞர் ஓர் உடையைத் தைக்க வேறு உடையின் மாடலைப் பின்பற்றுவார். எந்த ஒரு மாடலும் இல்லாமல் உடையை தைத்துக் கொடுக்க முடியாது. அதுபோல, நமது ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து மாதிரியைப் பின் வைத்துப் போயுள்ளார். (1பேதுரு 2:21).

தேவன் பிதாக்களின் காலத்தில் மனுக்குலத்தை இரட்சிக்க நோவா என்ற தேவ தாசரைத் தெரிந்து கொண்டார். ஏனென்றால், அந்நாட்களில் இருந்த ஜனங்களுக்குள்ளே அவர் நீதிமானும், உத்தமனும், தேவனோடே சஞ்சரித்துக் கொண்டுமிருந்தபடியால் கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது. (ஆதி. 6:8,9) எனவே, வரும் ஜலப்பிரளயத்திலிருந்து ஜனங்களைக் காப்பாற்ற தேவன் ஒரு பேழையைக் கட்டும்படி கட்டளை கொடுத்தார். அதோடு, பேழையின் மாதிரியையும் கொடுத்தார். அது கொப்பேர் மரத்தால் செய்யப்பட வேண்டும். அதின் அளவுகள், அறைகளின் எண்ணிக்கை, ஜன்னல் போன்றவைகள் மாதிரியாக இருந்தது (Pattern) (ஆதி. 6:14-16) நோவா அப்படியே செய்தார் (ஆதி. 6:22) தேவன் கொடுத்த மாதிரியைப் பின்பற்ற கவனமாக இருந்தார். எதையும் கூட்டவோ, குறைக்கவோ இல்லை (நீதி. 30:5,6) அந்நாட்களில் மனுக்குலம் இரட்சிக்கப்படுவதற்கு பேழையை உண்டு பண்ணினார். ஆனால், ஜனங்கள் புசித்தும், குடித்தும், பெண் கொண்டும், பெண் கொடுத்தும் ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகும் மட்டும் உணராதிருந்தார்கள். (மத். 24:37-39). ஜலப்பிரளயத்திலிருந்து பேழைக்குள் பிரவேசித்து இரட்சிக்கப்பட்டவர்கள் நோவாவும் அவரது குடும்பத்தினருமான மொத்தம் எட்டுபேர் மாத்திரமே. அதற்கு ஒப்பனையாக இன்று ஞானஸ்நானமும், சபையும் இருக்

கின்றது (1பேதுரு 3:21) ஜலப்பிரளயத்திலிருந்து அவர்கள் பேழைக்குள் காக்கப்பட்டதுபோல, நாமும் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஞானஸ்நானத்தின் மூலமாக இரட்சிக்கப்பட முடியும். இவ்விதமாக இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் சபையிலே சேர்த்துக் கொள்ளுகிறார். (அப். 2:41,47) அன்று ஒரே ஒரு பேழை இருந்தது போலவே இன்றும் ஒரே ஒரு சபை இருக்கின்றது. (மத். 16:18) அதைக் குறித்து நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். நோவா நாட்களில் ஜனங்கள் உணரா திருந்து அழிந்தனர். நாம் வரும் நியாயத்தீர்ப்பின்போது அழிக் கப்படாமல் இருக்க வேண்டும். அதற்காக தேவன் நமக்கு ஒரே ஒரு சபையை வைத்திருக்கிறார். பாதாளத்தின் வாசல்கள் அதை (சபையை) மேற்கொள்ள முடியாது என்று நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து கூறியிருக்கின்றார். (மத். 16:18)

### II எருசலேம் தேவாலயத்தின் மாதிரி

தேவன் இஸ்ரவேலர்களை எகிப்து தேசத்திலிருந்து கானான் தேசத்திற்குச் செல்ல வனாந்திர வழியை தெரிந்து கொண்டார். ஏனென்றால், வனாந்திரம் அவர்களுக்கு பாதுகாப்பான வழி என்று தேவன் நினைத்தார். நாற்பது ஆண்டுகளாக வனாந்திரத் தைச் சுற்றினார்கள். அப்பொழுது அவர்கள் தேவனை ஆராதிப் பதற்காக ஆசாரிப்புக் கூடாரம் ஒன்றை ஏற்படுத்தும்படி தேவன் மோசேயிடத்தில் மலையில் உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரி யின்படியே அவைகளைச் செய்ய எச்சரிக்கையாயிரு என்று கூறி னார் (யாத். 25:40). அதன் பின் ஆசாரிப்பு கூடாரத்தை ஏற்ப டுத்தி தேவனை ஆராதித்தனர். இந்த ஆசாரிப்புக் கூடாரத்தைத் தொடர்ந்து தான் பிற்காலத்தில் சாலமோன் எருசலேமில் மிகப் பெரிய தேவாலயமாகக் கட்டினார். இதைக் கட்டுவதற்கும் தேவன் மாதிரியை தாவீது என்ற தமது தாசனிடத்தில் கொடுத்தி ருந்தார். ஆதலால், தாவீது ஆவியினால் ஏவப்பட்டு தனது குமாரன் சாலமோனுக்கு, "இப்போதும் எச்சரிக்கையாயிரு, பரிசுத்த ஸ்தலமாகிய ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்கு கர்த்தர் உன்னைத் தெரிந்து கொண்டார் நீ திடன் கொண்டு அதை நடப்பி ...இந்த *மாதிரியின்படி* சகல வேலைகளும் எனக்குத் தெரியப்ப டுத்த இவையெல்லாம் கர்த்தருடைய கரத்தினால் எனக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது என்றான்" (I நாளா 28:12,19) தாவீது தனது குமாரன் சாலமோனிடம் மாதிரியை ஒப்படைக்கு முன் தேவ னால் கொடுக்கப்பட்ட அளவின்படியே பணிதீர்ந்து கொண்டு வரப்பட்ட சலவைக் கற்களை தாவீது சேர்த்திருந்தார். (I நாளா 28:111-13). அந்த மாதிரியைப் பின்பற்ற சாலமோன் மிகவும் ஜாக்கிரதையாக இருந்தார். எந்த அளவுக்கு ஜாக்கிரதையாயிருந் தார் என்றால், ஆலயம் கட்டப்படுகிறபோது சுத்திகள், வாச்சிகள்

முதலான இருப்பு ஆயுதங்களின் சத்தம் கேட்கப்படாமல் இருந்த தே அந்த ஜாக்கிரதை (I இராஜா 6:7) *மாதிரி* இல்லாமல் ஆசாரிப் புக் கூடாரமோ, எருசலேம் தேவாலயமோ கட்டப்படவில்லை என்ற உண்மையை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

தேவன் தமது ஜனங்கள் பின்பற்றி நடப்பதற்கு எப்பொழு தும் மாதிரியைத் தருகிறார். சாலமோனின் தேவாலயத்திற்கு தேவன் கட்டிடக் கலைஞராயிருந்தார். அதுபோலவே சாலமோ னிலும் பெரியவர் ஒருவரால் புதிய ஏற்பாட்டு சபை கட்டப்பட வேண்டியதாயிருந்து. (மத். 12:42, 16:18) அதற்கும் தேவனே கட்டிடக் கலைஞராயிருக்கிறார் (எபி. 3:4).

இயேசு கிறிஸ்து, பொருட்களால் ஆன கட்டிடத்தையோ அல்லது சபை கூடிவரும் கட்டிடத்தையோ கட்டப் போவதில்லை என்று அறிவித்தார். (மத். 16:18) அதன்படி, கி.பி. 33-ல், எருச லேம் நகரத்தில் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப் பட்ட மூவாயிரம் பேரைக் கொண்டு கட்டினார் (அப். 2:37-47) ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே சாலமோனினும் பெரியவர் (மத். 12:42).

## III அப்போஸ்தலருக்குக் கொடுக்கப்பட்ட மாதிரி

சாலமோனினும் பெரியவர் இயேசு கிறிஸ்து தமது ஆலயத் தை சலவைக் கற்கள் மற்றும் கேதுரு மரங்களைக் கொண்டு கட்டாமல் ஜீவனுள்ள கற்களாகிய (1பேதுரு 2:5) இரட்சிக்கப் பட்டவர்களைக் கொண்டு கட்டினார். இது ஆவிக்குரிய மாளிகை யாக உள்ளது. இந்த ஆவிக்குரிய ஆலயமாகிய சபை உலக முழு வதும் கட்டும்படி இயேசு தமது அப்போஸ்தலரிடத்தில் கூறினார். நீங்கள் பூலோகத்திலே எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும் என்றார் (மத். 18:18) மேலும், அப்போஸ்தலர் நடபடிகளில் 2-ம் அதிகாரத்தில் எருசலேமில் சபை ஸ்தாபிக்கப்படுவதற்கு முன் இயேசு தமது அப்போஸ்தலரிடத்தில் பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதி லும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப். 1:8) அதன்படி, சபை முதலில் எருசலேமில் மூவாயிரம் பேரைக் கொண்டு ஆரம்பிக் கப்பட்டது. அது வளர்ந்து உலக முழுவதும் பரம்பியது. (கொலோ 1:6).

சபைக்காக அப்போஸ்தலருக்குக் கொடுக்கப்பட்ட மாதிரி (Pattern)

1. இயேசு கிறிஸ்து மூலைக்கல் (எபே. 2:20)
2. அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் (ஏசாயா, தானியேல்) அஸ்திபாரம்.

3. தேவனுடைய வாசஸ்தலம் (எபே. 2:22)
4. சபைக்கு கிறிஸ்து தலைவர் (எபே. 5:23)
5. கிறிஸ்துவின் சரீரம் (கொலே 1:18)
6. தேவனுடைய வீடு (1 தீமோ. 3:15)
7. புதிய எருசலேம் (வெளி. 21:1)
8. தேவனுடைய சபை (1கொரி. 1:2)
9. இந்த முழுக்குடும்பத்திற்கும் கிறிஸ்துவின் நாமம் (எபே. 3:14,15)
10. கிறிஸ்துவின் சபையார் (ரோமர் 16:16).

அருமையானவர்களே, சபைக்குக் கொடுக்கப்பட்ட மாதிரியை (Pattern) நாம் பின்பற்ற மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். மேலே சொல்லப்பட்டுள்ள பெயர்கள் எந்த ஒரு பிரிவினை சபையையும் குறிக்கவில்லை. அவைகள் அனைத்தும் தேவனுடைய வீடான கிறிஸ்துவின் சபையையே குறிக்கிறது.

(தொடரும்)

K. பாஸ்கர்

## நாளும் நடப்பும்

1. 2 ஜி அலைக்கற்றை வருவாய் இழப்பு விவகாரம் பாராளுமன்றத்தை முடக்கி வைத்துள்ளது.
2. சமீபத்தில் பெய்த கன மழை காரணமாக பல மாவட்டங்களில் கடும் சேதம் ஏற்பட்டு இருக்கிறது.
3. வட மாநிலங்களில் கடும் குளிர் வாட்டி எடுக்கிறது.
4. விக்கிலீக்ஸ் இணையதள கசிவு அமெரிக்க வல்லரசை ஆடிப் போகச் செய்துள்ளது.
5. நதிகளைப் பாதுகாக்க தேசியக் கொள்கை அவசியம் என்ற கருத்து வலுத்து வருகிறது.
6. பௌத்த நாட்டவர்களுக்கு வந்த உடனே விசா: இந்தியா முடிவு.
7. ஹாங்காங் ஓபன் பாட்மிண்டன் பட்டம் வென்றார் சாய்னா.

# சுவிசேஷம்

சுவிசேஷம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. நித்திய ஜீவனைக் கொண்டு வருகின்ற செய்தியை உள்ளடக்கிய இந்த நற்செய்தி மனித அறிவின் விளைவாக உண்டாகவில்லை, ஆனால், புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களுக்கு இயேசு கிறிஸ்துவினால் வெளிப்படுத்தப்பட்டு ஒப்புக் கொடுக்கப்பட்டது (கலாத்தியர் 1:11,12). இந்த உண்மை சம்மந்தமாக பவுல் இளம் பிரசங்கியான தீமோத்தேயுவிற்கு இவ்விதமாக எழுதினார். வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது (II தீமோத்தேயு 3:16). I கொரிந்தியர் 2:13ன் படி சுவிசேஷச் செய்தியின் ஒவ்வொரு வார்த்தையும் தேவனால் ஊதப்பட்டது தான்.

**சுவிசேஷம் தேவனுடைய வல்லமையை உள்ளடக்கியது**

இந்த தேவ வல்லமை அணுவின் மையப்பகுதிக்குள் மனிதர்கள் கண்டுபிடித்திருக்கிற வல்லமை அல்ல, அதேப் போல நவீன மனிதனுடைய மின்சாதனங்களைக் கையாளும் திறமையினால் வெளிக் காட்டப்படும் வல்லமையோடும் இதை ஒப்பிட முடியாது. சுவிசேஷத்தில், இரட்சிப்பை உண்டாக்குகிற தேவ பெலன் இருக்கிறது, இருளின் பிள்ளையை ஒளியுள்ள தேவனுடைய பிள்ளையாக மாற்றும் வல்லமை சுவிசேஷத்தில் இருக்கிறது (ரோமர் 1:16). தேவனுடைய பிள்ளைகளை பெற்றெடுக்கும் வித்தாக சுவிசேஷம் இருக்கிறது.

விதைக்கிறவனுடைய உவமையின் விளக்கத்தில் நம் கர்த்தர், "விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான்; விதை தேவனுடைய வசனம்" என்று வெளிப்படுத்தினார் (மாற்கு 4:14; லூக்கா 8:11). அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாகச் சொன்னார் "கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன்" என்று (1கொரிந்தியர் 4:15).

**சுவிசேஷம் நித்தியமானது**

கிறிஸ்து இவ்விதமாக அறிவித்தார் "வானமும், பூமியும் ஒழிந்து என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை" (மத்தேயு 24:35). காலங்களைக் கடந்த கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் செய்தி உலகத்திலேயே அதிகமாக விற்பனையாகும் புத்தகமாக பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து இருந்து வருகிறது. தேவன் தம்முடைய தாசனாகிய பேதுரு மூலமாக இப்படிச் சொன்னார் " கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் " (I பேதுரு 1:25).

**DALTON KEY**

# ஒன்றான மெய் தேவனை எப்படி அறிவது?

**வே**தாமகத்தில் " தேவனை அறியும் அறிவு " என்ற சொல் மிக முக்கிமானது! இங்கு "தேவன்" என்ற சொல் உலக வழக்கில் "கடவுள்" என்ற சொல்லுக்கு சமமானது. மனிதனை தேவன் தான் உண்டாக்கினார் என்று பலரும் நம்புகிறார்கள். ஆனால், அந்த தேவன் யார்? அவர் எப்படிப்பட்டவர்? அவருடைய விருப்பம் என்ன? என்பதை அநேகர் அறிவதில்லை. மனிதன் தான் உண்மை தேவனைக் கண்டுபிடிக்க வேண்டும். இந்த முக்கிய பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உள்ளது (அப். 17:27) வேதத்தை அறிந்த ஜனத்தின் மத்தியிலும் தேவனை அறிகிற அறிவு குறைபட்டுள்ளதைக் காண்கிறோம்.

தேவனால் மீட்கப்பட்ட இஸ்ரயேல் (இதுவே சரியான உச்சரிப்பு) ஜனங்கள் தங்கள் தேவனைப் பற்றிய அறிவு சரியாக இல்லாத காரணத்தினால் பரலோகத்தின் தேவன் அவர்களைக் கடிந்துக் கொண்டார். " மாடு தன் எஜமானையும், கழுதை தன் எஜமானின் இடத்தையும் அறியும் அளவிற்கு கூட தன் மக்கள் தன்னை அறியவில்லையே " என்று வருத்தப்பட்டார் (ஏசா 1:3). அவர்கள் மதியற்றவர்கள் என்றும், ஆகாயத்துப் பறவைகளே மேலானது என்றும் கடிந்து கொண்டார் (எரேமி 4:22,8:7). மேலும், ஒரு மனிதன் தன் நியாயத்திற்காக நீதிமன்றத்தில் வழக்காடச் செல்வதுபோல, தேவன் இஸ்ரயேல் ஜனங்கள் மீது தமக்கு ஒரு வழக்கு இருப்பதாகவும், அது தன்னைப் பற்றிய அறிவு பற்றியது என்றும் வழக்கு தொடுக்கின்றார். அது மாத்திரமல்ல, ஜனங்கள் செலுத்தும் பலி, காணிக்கைகளை விட தேவனை பற்றிய அறிவு மக்களிடம் இருக்க வேண்டும் என்று அவர் பிரியப்படுகின்றார் (ஓசியா 4:1,6:6).

சரி, மேற்சொன்னவைகள் இஸ்ரயேல் ஜனங்களுக்கு மாத்திரம் பொருந்தும் என்கிறீர்களா? இல்லை, இன்றைய காலத்திலும் கிறிஸ்துவை பின்பற்றுகிற அனைவருக்கும் இவை பொருந்துகிறதாயிருக்கிறது. அடிப்படையில் கிறிஸ்துவை பின்பற்றுபவர்கள் நித்திய ஜீவனை பெற ஒன்றான மெய் தேவனையும் அவர் அனுப்பின இயேசுவையும் அறியவேண்டும் என ஆண்டவரே கூறுகிறார் (யோவா 17:3) கிறிஸ்துவின் ஊழிய காலத்தில் யூதர்கள் இயேசுவைப் பற்றி சரியாக அறிந்து கொள்ளவில்லை! (யோவா 8:19). அவ்வாறே இக்காலங்களில் ஜனங்கள் இயேசுவைப் பற்றி அறிந்து கொண்ட அளவுக்கு, அவரை அனுப்பிய பிதாவாகிய தேவனை அறியாமல் இருக்கின்றார்கள்! மனுஷரில் ஒருவரும் காணக்கூடாத, கண்டிராத, உருவமற்ற, ஆவியாயிருக்கின்ற, இருக்கிறவராகவே இருக்கின்ற, எல்லாவற்றையும் அறியும் வல்லமையும், எல்லாம் செய்யக்கூடிய சர்வ வல்லமையும்,

எங்கும் நிறைந்தவராய் இருக்கின்ற அந்த ஒரே பிதாவாகிய தேவனை, மாம்சத்தில் வந்த அவருடைய ஒரே பேறான குமாரனே இவ்வுலகிற்கு வெளிப்படுத்தினார் (யோவா 1:18) சுவிசேஷம் என்ற வார்த்தையில் தேவனை அறியும் அறிவும் அடங்கியுள்ளது. அதை அறியாத பட்சத்தில் தண்டனை உண்டு (I தெச. 1:7). தேவனைப் பற்றிய அறிவு இப்போது சபையின் மூலமாக தெரிய வரவேண்டும் (எபேசி. 3:10). ஆனால், இன்றைய பிரிவினை சபை கூட்டங்களில் கட்டுக்கதைகளும், மாம்சீக ஞானமுமே தெரிய வருகின்றன. இரட்சிக்கப்பட்ட மக்களிடையே தேவனைப் பற்றிய அறிவு இல்லாதது வெட்கத்திற்குரியது (1கொரி. 15:34). அநேகர் இன்றைய நாட்களில் ஆண்டவர் இயேசுவும், பிதாவும் ஒரே நபர்தான் என்ற குழப்பத்தில் இருக்கின்றனர். எனவே, தான் ஜெபிக்கும்போது நீர் எங்களுக்காக மரித்தீரே, இரத்தம் சிந்தினீரே நன்றி. இந்த ஜெபத்தை இயேசுவின் நாமத்தில் ஏறெடுக்கின்றோம் எங்கள் பிதாவே என்று பொருளில்லாமல் ஜெபிக்கின்றனர். மாறாக, உம் குமாரனை எமக்காக மரிக்கச் செய்தீரே, அவருடைய இரத்தம் எனக்காக சிந்தப்பட்டதற்காக நன்றி என்பதாக நம் ஜெபங்கள் அமைய வேண்டும்.

குழப்பத்திற்கான காரணம்; யோவான் 10:30-ல் நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்று ஆண்டவர் சொல்லியிருப்பதைச் சுட்டிக் காண்பிக்கிறார்கள். ஆனால், அதின் அர்த்தம் மத் 19:5ல் குறிப்பிடும் புருஷனும், மனைவியும் ஒரே மாம்சமாய் இருப்பார்கள் என்ற ஒற்றுமையை தான் குறிக்கும். ஏசா 9:6ல் நித்திய பிதா என்ற நாமமுடையவர் என்பது தீர்க்கதரிசனம் ஆகும். அதாவது, பிதாவாகிய தேவனுடைய குணாதிசயங்களை நம் மாம்ச கண்களால் காண இயலாது. அவற்றை மாம்சத்தில் வெளிப்பட்ட ஆண்டவர் இயேசு தம வாழ்க்கையில் வெளிப்படுத்தினார் (கொலே 2:9; யோவா 1:14). எனவே தான், ஊழியத்தின் நிறைவாக சீஷர்களை விட்டுப் பிரியும்போது, பிலிப்புவிடம் என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்று இயேசு சொன்னார். கிறிஸ்துவினாலேயே ஒருவன் பிதாவிடம் வரமுடியும் என்பதே அவருடைய உபதேசமாயிருக்கிறது. ஆண்டவர் தம்மை தேவனுடைய குமாரன் (யோவா 10:36) என்றும் இரட்சிக்கப்பட்டவர்களை என் சகோதரர் என்றும், (எபி. 2:11) எடுத்துக்காட்டுவதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். நாங்கள் இருவராய் இருக்கிறோம் என்று இயேசு உபதேசித்தார் (யோவா 8:17,18) அவர்கள் இருவரிடத்திலும் விசுவாசமாயிருக்கச் சொன்னார் (யோவா 14:1). ஒருமுறை ஒருவன் இயேசுவை நோக்கி “நல்ல போதகரே” என்றழைத்தான். அதற்கு இயேசு “பிதாவே நல்ல போதகர்” என பதிலளித்தார். தேவனைப் பற்றிய அறிவில்லாத சிலர் ஆண்டவர் தாழ்மையை வெளிப்படுத்த அப்படி சொல்லியிருக்கலாம் என்கின்றனர். ஆனால், அவர் தம் உபதேசத்தில் தெளிவாக, நான் சுயமாய் வரவில்லை, சுயமாய் பேசவோ, செய்வதோ இல்லை; எல்லாம் என்னை அனுப்பின

பிதாவின் சித்தப்படியே செய்கிறேன் என்று சொன்னார். எனவே யாதொருவன் பிதாவின் சித்தம் செய்யாமல் தம்மைக் கர்த்தாவே, கர்த்தாவே என்று அழைப்பது வீண் என்றார். மாத்திரமல்ல பிதாவின் சித்தப்படி நடப்பவர்களே அவருக்கு சகோதரரும், தாயுமாக இருக்கிறார்கள் என்றார்.

மேலும், கிறிஸ்து தாம் ஊழியம் செய்த காலத்தில், முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தைத் தேடுங்கள் என்றும், தேவனுடைய ராஜ்ஜியத்தைப் பற்றி பிரசங்கிக்கவே இவ்வுலகிற்கு வந்தேன் என்றும் கூறினார். சிறுவயதில் அவர் தாயார் தேடிய போது, ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கு அடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியது என்பதை எடுத்துக் காண்பித்தார். பிதாவினிடத்தில் ஜெபிக்கவும், விசுவாசமாயிருக்கவும் அவர் தம்மைப் பின்பற்றியவர்களுக்கு உபதேசித்தார். அது மாத்திரமல்ல ஒருமுறை யாக்கோபு, யோவான் என்பவர்களின் தாயார் தம் பிள்ளைகள் உன்னதத்தில் ஆண்டவருக்கு அருகில் உட்கார வேண்டும் எனக் கேட்டுக் கொண்டபோது, அது என் பிதாவின் அதிகாரத்திலுள்ளது என்றார். தம் சீஷர்களிடம் பிதா என்னை விடப் பெரியவர் என்று தெளிவாக உரைத்தார் (யோவா 10:29,14:28) இந்தப் பிதாவாகிய தேவனே இஸ்ரயேலை எகிப்திலிருந்து மீட்டு இரட்சித்தவர். அவர்கள் வணங்கிய பிதாவாகிய தேவனே ஒன்றான மெய்த் தேவன். அந்த ஒன்றான மெய்த் தேவனையே அனைவரும் வணங்க வேண்டும் எனக் கர்த்தராகிய இயேசு உபதேசித்தார் (யோவா 4:24, மத். 4:10) இயேசுவின் நாமத்தில் முழங்கால்கள் முடங்கி பிதாவையே மகிமைப்படுதத வேண்டும் (பிலி. 2:10,11). ஒரு முக்கிய உபதேசம் என்னவெனில், ஆண்டவர் இயேசு மனுஷரால் வரும் மகிமையை விரும்பவில்லை (யோவா 5:41) மாறாக, மனுஷரால் மகிமைப்படுவதைப் பிதாவாகிய தேவன் விரும்புகிறார் (யோவா 4:23) எனவேதான், ஆண்டவர் இயேசுவும் மனிதனாக வந்த போது பிதாவை மகிமைப்படுத்தினார் (யோவா 7:18) இரண்டாம் வருகை பற்றி சீஷர்கள் கேட்ட போது அதுவும் பிதாவின் அதிகாரத்தில் இருப்பதாக தெளிவுப்படுத்தினார் (மத். 24:36) இவ்வுலகத்தின் முடிவில் ராஜ்ஜியமாகிய தம் சபையை பிதாவிடம் ஒப்புக்கொடுப்பார். (I கொரி. 15:24) இன்றைய நாட்களில் துதிப்பாடல்கள் அனைத்தும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் துதிப்பதே அப்போஸ்தலருடைய உபதேசமாகும். ஒரு சபை அப்போஸ்தலருடைய உபதேசத்தில் நிலைக்க புதிய ஏற்பாட்டு சத்தியம் (அப். 2:42) நம்மை வழி நடத்துகிறது. ஆண்டவர் இயேசு நமக்கு வெளிப்படுத்திய அந்த ஒன்றான மெய்தேவனை அறிந்து நித்திய ஜீவனைப் பெறுவோம். நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் கிருபை நம் அனைவரோடுங் கூட இருப்பதாக. ஆமென்.

**சகோ. பாண்டியன், பாண்டிச்சேரி.**

## "கிருபையுள்ள வார்த்தை" தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


பேச்சாளர் : சகோ. **பிலேமோன் ராஜா**, மதுரை.

| | | | |
|---|---|---|---|
| Z தமிழ் | TV | வெள்ளி | காலை 5:30 மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | காலை 7:45 மணி |

## "கிறிஸ்துவின் வசனம்" தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

பேச்சாளர் : சகோ. **அர்ச்சுனன்**, வத்தலக்குண்டு.

| | | | |
|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை 6:00 மணி |
| இமயம் | TV | புதன் | காலை 6:30 மணி |



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Thursday Sunday | 6.45 - 7.00 a.m. | Box. 3815 New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sundays, Mondays, Tuesdays, Thursdays, | 2.00 - 2.15 p.m. | Box. 80 Kakinada - 533 001 | Joshua Gootam |
| TAMIL | Mondays, Tuesdays, Thursdays, Fridays, | 5.30 - 5.45 p.m. | Box. 8405 Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Fridays | 3.45 - 4.00 p.m. | Box. 5540 Thiruvananthapuram - 695 034. | P.K. Varghese |

Regd. News Paper RNI No. 47661/87- Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2009-20111

# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| இமயம் | TV | செவ்வாய் | காலை | 6:15 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன் பெறலாம்.

இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.